

சிறப்பு அறிக்கை: போற்றப்படும் ஊதியம், பாதுகாப்பு, கவுரவம்! பக்கம், 12-17



» தொகுதி 1, இதழ் 7

» அக்டோபர் 1-15, 2020

இலவச விநியோகத்திற்காக

# நியூ இந்தியா சமாச்சார்

# NEW INDIA SAMACHAR

» Volume 1, Issue 7

» October 1-15, 2020

சிறப்பு இதழ் : வேளாண்மை & தொழிலாளர் நல சீர்திருத்தங்கள்

## தற்சார்புடைய விவசாயிகள்; தற்சார்பு இந்தியா

இடைத்தரகர்களின் பிடியிலிருந்து விவசாயிகள் விடுபடுவதை உறுதி செய்ய, வதந்திகளையும், கிளர்ச்சிகளையும் துணிவுடன் புறந்தள்ளி அரசின் புரட்சிகர நடவடிக்கைகள்



# சென்று வாருங்கள் பிரணாப் தா...

*முன்னாள் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா டாக்டர் பிரணாப் முகர்ஜி வெற்றிடத்தை ஏற்படுத்தி விட்டு 2020 ஆகஸ்ட் 31 அன்று நம்மிடையே இருந்து மறைந்தார். பிரதமர் நரேந்திர மோடி அவருடன் எப்போதும் நல்லதொரு நல்லுறவைக் கொண்டிருந்தார். அவர் பொதுவாழ்க்கையிலிருந்து ஓய்வு பெற்ற தருணத்தில் பிரதமர் உணர்வுமிக்கதொரு செய்தியை எழுதியிருந்தார். அவர் அப்போது கூறியிருந்ததாவது: "எப்போதுமே நீங்கள் எனக்குத் தந்தையைப் போன்றவர் மட்டுமின்றி வழிகாட்டியாகவும் இருந்து வந்திருக்கிறீர்கள். உங்களின் பரந்த அறிவு, வழிகாட்டுதல், தனிப்பட்ட கனிவு ஆகியவை எனக்கு மகத்தான நம்பிக்கையையும் வலிமையையும் வழங்கி வந்துள்ளன."*

"பாரத ரத்னா திரு. பிரணாப் முகர்ஜியின் மறைவு இந்தியாவை துக்கத்தில் ஆழ்த்தியுள்ளது. நமது நாட்டின் வளர்ச்சிப் பாதையில் அழிக்கமுடியாததொரு அடையாளத்தை அவர் விட்டுச் சென்றிருக்கிறார். ஈடிணையற்ற அறிஞராகவும், மகத்தான ஆட்சி நிபுணராகவும் திகழ்ந்த அவர் அனைத்து அரசியல் பிரிவினராலும், சமூகத்தில் அனைத்துப் பிரிவினராலும் போற்றப்பட்டவராகவும் இருந்தார்."

பிரதமர் நரேந்திர மோடி

# நியூ இந்தியா சமாச்சார்

» Volume 1, Issue 7 » October 1-15, 2020

**Editor**
Kuldeep Singh Dhatwalia,
PDG, PIB, New Delhi

**Consulting Editor**
Vinod Kumar

**Assistant Consulting Editor**
Sharat Kumar Sharma

**Designer**
Ravindra Kumar Sharma

**Published & Printed by**
Satyendra Prakash,
DG, BOC
on behalf of Bureau of
Outreach and
Communication

**Printed at**
Infinity Advertising services Pvt.Ltd.
FBD-One Corporate Park, 10th floor,
New Delhi-Faridabad border, NH-1,
Faridabad-121003

**Published from**
Bureau of Outreach and
Communication, 2nd Floor, Soochna
Bhawan,
New Delhi -110003

**NEW INDIA SAMACHAR**

RNI No. : **DELTAM/2020/78809**

response-nis@pib.gov.in

## பொருளடக்கம்

» 1 **தலையங்கம்** »Pg. 02

» 2 **சுகாதாரம்:** ஊட்டச்சத்து மாதம் »Pg. 03

» 3 **செய்திச் சுருக்கம்** »Pg. 04-05

» 4 **மகாத்மா காந்தி பிறந்தநாள்** »Pg. 06-07

» 5 **நெசவுத் துறை:** காதியின் வளர்ச்சி »Pg. 08-9

» 6 **நாடு:** புதிய கண்டுபிடிப்புகளுக்கான உலகளாவிய அட்டவணை »Pg. 10-11

» 7 **சிறப்பு அறிக்கை :** தொழிலாளர் நல சீர்திருத்தங்கள் »Pg. 12-17

» 8 **அட்டைப்படக் கட்டுரை:** தொழிலாளர் நல சீர்திருத்தங்கள் »Pg. 18-25

» 9 **முன்முயற்சி:** பிரதமர் மீன் வளாகத் திட்டம் »Pg. 26-28

» 10 **மாநிலங்கள்:** வளர்ச்சித் திட்டங்கள் »Pg. 29

» 11 **உதவும் கரங்கள்:** பிரதமர் ஸ்வநிதி திட்டம் »Pg. 30-31

» 12 **கர்மயோகி இயக்கம்:** சிறந்த நிர்வாகத்திற்கான முன்முயற்சி »Pg. 32-34

» 13 **சுயச்சார்பு:** எச் எஸ் ட்டி டி வி தொடக்கம் »Pg. 35

» 14 **முன்னோடி திட்டம்:** தூய்மையான இந்தியா இயக்கம் »Pg. 36-38

» 15 **கொரோனாவிற்கு எதிரான யுத்தம்** »Pg. 39

» 16 **நேர்மறை அணுகுமுறை:** மாறிவரும் இந்தியா »Pg. 40

# ஆசிரியர் மேசையிலிருந்து...

அனைவருக்கும் வணக்கம்.

நியூ இந்தியா சமாச்சார் இதழின் நான்காவது இதழ் இப்போது உங்கள் கைகளில் தவழ்கிறது. இந்த இதழுக்காக நீங்கள் ஆவலோடு காத்துக் கொண்டிருந்திருப்பீர்கள்.

பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் செயல்திறன்மிக்கதொரு அரசு செயல்பட்டு வருகிறது.

ஒவ்வொரு துறையிலும் நாட்டை முன்னெடுத்துச் செல்ல இந்த அரசு உறுதிபூண்டுள்ளது.

அரசின் முடிவுகள், பணிகள், திட்டங்கள் ஆகியவை குறித்த அனைத்து தகவல்களையும் வாசகர்கள் இந்த இதழின் மூலம் பெறலாம்.

இந்த இதழ் அரசின் ஊதுகுழலாக இல்லாமல், சரியான தகவலை வழங்குவதற்கான ஒரு மேடையாகவே விளங்குகிறது.

இந்த இதழ் கிராமப் பஞ்சாயத்துகள், மாவட்ட பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து ஒன்றியங்கள், நூலகங்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் பத்திரிக்கையாளர்களை சென்றடையும்.

இந்த இதழின் இணைய வடிவம் இப்போது சுமார் 5 கோடி பேரின் கைகளில் தவழ்கிறது.

இந்த இதழ் குறித்த உங்கள் பின்னூட்டம், ஆலோசனை ஆகியவற்றை நாங்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.

உங்கள் கருத்துக்களை தயவு செய்து கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்:

முகவரி: பீரோ ஆஃப் அவுட்ரீச் அண்ட் கம்யூனிகேஷன், இரண்டாம் தளம், சூசனா பவன்

புதுதில்லி - 110 003.

இ-மெயில்: response-nis@pib.gov.in, mailto:response-nis@pib.gov.in

உங்களின் வாழ்த்துக்களுடன்

K S Dhatwalia

கே.எஸ். தத்வாலியா



# ஊட்டச்சத்து மாதம்: ஒரு வெகுஜன இயக்கம்

பெண்கள், குழந்தைகள், முதியோர் தரமான உணவை எடுத்துக்கொள்வதற்கான இயக்கத்தின் அடையாளமாக திகழ்கிறது ஊட்டச்சத்து மாதம்

நாடும் ஊட்டச்சத்தும் மிக தொடர்புடையவை ஆகும். இதுகுறித்த விழிப்புணர்வை மக்களிடையே உருவாக்குவதற்காக செப்டெம்பர் மாதத்தினை ஊட்டச்சத்து மாதமாக அரசு கொண்டாடுகிறது. இளம் குழந்தைகள், பெண்கள் ஆகியோரிடையே ஊட்டச்சத்து குறைவு குறித்த பிரச்சனைகளின் மீது கவனம் செலுத்தவும், ஒவ்வொருவருக்கும் உடல்நலம், ஊட்டச்சத்து ஆகியவற்றை உறுதிப்படுத்தவும் ஒரு வெகுஜன இயக்கத்தை உருவாக்க மக்களின் பங்கேற்பிற்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடனேயே பிரதமரின் முழுமையான ஊட்டச்சத்துக்கான நீட்சித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி தனது மன் கி பாத் தொடரின் சமீபத்திய நிகழ்வில் உணவே மருந்து என்ற மூதுரையை நினைவு கூர்ந்தார். அதாவது தரமான உணவை உட்கொள்வது என்பது எவரொருவரின் மனம் மற்றும் அறிவு வளர்ச்சியோடு நேரடியான தொடர்புடையது என்பதே இதன் பொருளாகும்.

குழந்தைகளும் மாணவர்களும் தங்களது அதிகபட்ச திறமையை எட்டிப் பிடிக்கவும், தங்களது திறமையை வெளிப்படுத்தவும் முறையான சத்துணவு மிகப் பெரும் பங்கினை வகிக்கிறது. மேலும் குழந்தைகள் நல்ல செறிவானவர்களாக இருக்கவேண்டுமெனில், தாய்மார்களும் முறையான சத்துணவைப் பெறவேண்டியது அவசியமாகிறது.

குஜராத் மாநிலத்தில் அமைந்துள்ள சர்தார் பட்டேல் ஒற்றுமைக்கான சிலைக்கு அருகேயுள்ள ஊட்டச்சத்துப் பூங்கா குறித்தும் பிரதமர் தனது உரையில் குறிப்பிட்டார். “மிகவும் வித்தியாசமானதொரு ஊட்டச்சத்துப் பூங்கா அங்கே உருவாக்கப்பட்டுள்ளது. வேடிக்கையோடு, விளையாட்டாக ஊட்டச்சத்து குறித்த தகவல்களை அங்கிருந்து நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.” என்றும் அவர் குறிப்பிட்டார் ■

## தேசிய ஊட்டச்சத்து இயக்கம்

- 2017-18 ஆண்டு தொடங்கி மூன்று ஆண்டுகள் செயல்படும் வகையில் ரூ.9,046.17 கோடி மதிப்பிலான தேசிய ஊட்டச்சத்து இயக்கத்தை நிறுவுவதற்கு 2017 டிசம்பரில் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- இந்த ஊட்டச்சத்து இயக்கத்தை பிரதமர் 2018 மார்ச் 8 அன்று ராஜஸ்தான் மாநிலம் ஜுன் ஜுனுவில் அதிகாரபூர்வமாக தொடங்கி வைத்தார்.
- 2022ஆம் ஆண்டிற்குள் குழந்தைகளின் வளர்ச்சிக் குறைபாட்டை 25 சதவீதம் குறைப்பதற்கான முயற்சியை இந்த இயக்கம் மேற்கொள்ளும்.
- (இளம் குழந்தைகள், பெண்கள், பதின்பருவ பெண்கள் ஆகியோரிடையே) ஊட்டச்சத்துக் குறைபாடு, ரத்தசோகை ஆகியவற்றைக் குறைக்கவும், குழந்தைகள் மிகக் குறைந்த எடையில் பிறப்பதைக் குறைக்கவும் இந்த இயக்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டம் 2021 மார்ச் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ள நிலையில் 10 கோடிக்கும் மேற்பட்டோர் இதன் மூலம் பயன்பெறுவார்கள்.
- முழுமையான அணுகுமுறையை உறுதிப்படுத்தும் வகையில் அனைத்து மாநிலங்கள்/ துணைநிலை மாநிலங்கள், மாவட்டங்கள் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

### ஊட்டச்சத்து கண்காணிப்பாளர்கள் மற்றும் அட்டைகள்

- இந்திய ஊட்டச்சத்து பயிர் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் உருவாக்கப்படும் பயிர்களின் விவரங்கள் மற்றும் அவற்றில் அடங்கியுள்ள ஊட்டச்சத்து மதிப்பு ஆகியவை குறித்த விவரங்கள் அனைத்தையும் கொண்டதாக இத்திட்டம் அமைகிறது.
- இந்த வெகுஜன இயக்கத்தில் பள்ளிகளும் இணைக்கப்பட்டுள்ளன. ஊட்டச்சத்து குறித்த புரிதலை குழந்தைகளிடையே அதிகரிப்பதை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகள் இதன் மூலம் மேற்கொள்ளப்படும்.



- வகுப்பு கண்காணிப்பாளரைப் போன்றே ஒவ்வொரு வகுப்பிற்கும் என ஊட்டச்சத்துக்கான கண்காணிப்பாளரும் இருப்பார்.
- ஊட்டச்சத்துக்கான அடையாள அட்டை ஒன்றும் அறிமுகப்படுத்தப்படும்.



## புனிதமான, தூய்மையான வாரணாசி

தூய்மையான கங்கை குறித்த மக்களின் உறுதிப்பாட்டின் விளைவாக வாரணாசியின் படித்துறைகள் தங்களது பழைய பெருமையை மீண்டும் பெறத் தொடங்கியுள்ளன. 2020ஆம் ஆண்டின் தூய்மைக்கான ஆய்வில் கங்கை நதியோரமுள்ள நகரங்களிலேயே மிகவும் தூய்மையான நகரமாக வாரணாசி உருவாகியுள்ளதன் மூலம் இது நிரூபிக்கப்பட்டுள்ளது. கங்கை நதியில் தலைமுழுகுதல் என்ற சடங்கை செய்வதற்கு இப்போது மக்கள் தயங்குவதில்லை என வாரணாசியின் பூசாரிகளில் ஒருவர் தெரிவித்தார். அங்கு உருவாக்கப்பட்டுள்ள நாளொன்றுக்கு 14 கோடி லிட்டர் நீரை சுத்தகரிக்கும் நிலையம் கங்கை நதியை தூய்மையாக்குவதில் பெருமளவிற்கு உதவிகரமானதாக அமைந்துள்ளது. தூய்மையான இந்தியா திட்டத்தின்கீழ் நதியின் முகத்துவாரப் பகுதிகளை தூய்மைப்படுத்தி, அழகுபடுத்துவதற்கென 21 முக்கிய படித்துறைகள், 63 பொதுவான படித்துறைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. தினந்தோறும் 8-9 மெட்ரிக் டன்களுக்கும் மேற்பட்ட குப்பைகள் சேகரிக்கப்பட்டு மூடப்பட்ட படகுகளின் மூலம் இயற்கை உரத்தை உருவாக்குவதற்கென நிறுவப்பட்டுள்ள நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இதன் மூலம் வாரணாசி நகரம் மற்றவர்களுக்கு ஊக்கமளிப்பதாக மாறியுள்ளது. ■

## இந்தியாவும் ஜப்பானும் ஆயுதங்களில் யுத்த தந்திரரீதியான கூட்டாளிகள்

இந்திய ராணுவப் படைகளுக்கும் ஜப்பானின் தற்காப்புப் படைகளுக்கும் இடையே பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான பரஸ்பர ஏற்பாடு குறித்த ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளதை பிரதமர் நரேந்திர மோடியும் அன்றைய ஜப்பான் பிரதமர் அபே ஷின்ஸோவும் வரவேற்றனர். காணொளி காட்சியின் மூலம் பேசுகையில் இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்குமிடையே பாதுகாப்பு சார்ந்த ஒத்துழைப்பின் ஆழத்தை மேலும் அதிகரிக்கவும் இந்திய-பசிஃபிக் பகுதியின் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு பங்களிக்கவும் உதவும் என்பதை இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர். இந்தியா-ஜப்பான் நாடுகளுக்கு இடையிலன சிறப்பு யுத்ததந்திர ரீதியான, உலகளாவிய கூட்டணி ஆகிய கட்டமைப்பின்கீழ் மும்பை-அகமதாபாத் அதிவேக ரயில் உள்ளிட்ட தற்போது நிலவும் ஒத்துழைப்பின் நிலைமை குறித்தும் இரு தலைவர்களும் பரிசீலனை மேற்கொண்டனர். இருநாடுகளுக்குமிடையே நிலவும் வலுவான, நீடித்த கூட்டணி கொரோனா பெருந்தொற்றுக்குப் பிந்தைய உலகத்தில் உலகளாவிய சமூகத்தின் செயல்பாட்டை வடிவமைப்பதில் முக்கிய பங்கினை வகிக்கும் எனவும் இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர். ■

## உங்கள் உடல் நிலை குறித்து ஆரோக்ய சேது செயலியில் உடனடியாக சோதித்துக் கொள்ளுங்கள்




உலகத்திலேயே மிக அதிகமான அளவில் தரவிறக்கப்பட்டுள்ள தொடர்புகளை தடமறிவதற்கான செயலியான ஆரோக்ய சேது தற்போது வெளிப்படையான ஏபிஐ சேவை என்ற புதியதொரு அம்சத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தியாவில் பதிவு செய்துள்ள 50க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணிபுரியும் வர்த்தக நிறுவனங்களும் இதர அமைப்புகளும் இந்தப் புதிய அம்சத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதன் மூலம் இந்த நிறுவனங்கள் தங்களது ஊழியர்களின் அப்போதைய உடல்நிலை மட்டுமின்றி, அந்த நிறுவனத்துடன் தங்களது உடல்நிலை குறித்த தகவல்களை பகிர்ந்துகொள்வதற்கான ஒப்புதலை அளித்துள்ளவர்களின் உடல்நிலை குறித்தும் உடனடியாக அறிந்து கொள்ள முடியும். இந்த சேவையானது ஆரோக்ய சேது செயலியினை பயன்படுத்துபவரின் உடல்நிலை மற்றும் அவரது பெயரை மட்டுமே தெரிவிக்கும். இந்த சேவையின் மூலம் வேறு எந்த தனிப்பட்ட தரவுகளும் வழங்கப்படமாட்டாது. உலகிலேயே மிக அதிகமான அளவில் தரவிறக்கப்பட்டுள்ள தொடர்புகளை தடமறிவதற்கான செயலியாக உருவெடுத்துள்ள இந்தச் செயலியை 15 கோடிக்கும் மேற்பட்டோர் பயன்படுத்தி வருகின்றனர். இந்த செயலிக்கான மக்களின் மகத்தான ஆதரவின் விளைவாக முன்னணியில் உள்ள சுகாதார ஊழியர்களின் முயற்சிகளுக்கு இது உதவிகரமாக இருப்பதோடு, கொரோனா பெருந்தொற்றினை கட்டுப்படுத்துவது, அதன் மேலாண்மை ஆகியவற்றுக்கான அரசின் முயற்சிகளுக்கு உதவிகரமாக உள்ளது. ■

## ஊரடங்குக் காலத்தில் மக்கள் மருந்து நிலையங்களில் பரபரப்பான விற்பனை




மக்களுக்கு மிகக் குறைந்த விலையில் மருந்துகளை வழங்குகின்ற பிரதமர் மக்கள் மருந்து திட்டம் சேவை செய்வோம்; வேலைவாய்ப்பை உருவாக்குவோம் என்ற தனது நோக்கத்தினை நிறைவேற்றுவதாக அமைந்துள்ளது. இந்த மக்கள் மருந்து நிலையங்களில் சந்தையில் நிலவும் விலையை விட 50 முதல் 90 சதவீதம் குறைவாகவே மருந்துகள் விற்கப்படுகின்றன. சந்தையில் ரூ. 6500 ஆக உள்ள புற்று நோய்க்கான மருந்து இந்த நிலையங்களில் ரூ. 800க்கு விற்கப்படுகின்றன. கொரோனா பெருந்தொற்றின் விளைவாக பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு காலத்தில் இந்த மக்கள் மருந்து நிலையங்களின் விற்பனை இந்த நிதியாண்டின் முதல் காலாண்டில் ரூ. 150 கோடியை எட்டியது. இது இதற்கு முந்தைய நிதியாண்டின் இதே காலப்பகுதியில் விற்பனையை விட கிட்டத்தட்ட இரண்டு மடங்காகும். 2020 செப்டெம்பர் 15 வரையிலான காலத்தில் மொத்தம் ரூ. 256 கோடிக்கு மருந்துகள் விற்பனையாகியுள்ளன. இந்த மக்கள் மருந்து விற்பனை நிலையங்களின் மூலம் மக்களுக்கு கிடைத்துள்ள சேமிப்பு என்பது ரூ. 1250 கோடிக்கும் அதிகமாகும். நாடு முழுவதிலுமுள்ள 6,600க்கும் மேற்பட்ட மக்கள் மருந்து விற்பனை நிலையங்கள் 1250 வகையான மருந்துகளையும் 250 வகையான அறுவை சிகிச்சைக்கான கருவிகளையும் விற்பனை செய்து வருகின்றன. இந்த ஊரடங்கு காலத்தில் மக்கள் மருந்து விற்பனை நிலையங்கள் 15 லட்சம் முகக் கவசங்கள், 80 லட்சம் ஹைட்ராக்ஸிக்ளோகுயின் மாத்திரைகள் மற்றும் 1 கோடி பாரசிட்டமால் மாத்திரைகளை விற்பனை செய்துள்ளன. ஒன்றுக்கு ரூ. 1 என்ற விலையில் 5 கோடிக்கும் மேற்பட்ட சானிட்டரி நாப்கின்கள் இந்த மருந்து விற்பனை நிலையங்களின் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன. ■

## புதிய இந்தியாவின் அற்புதம் - கொல்கத்தாவில் நீருக்கு அடியிலான மெட்ரோ தொடர்பு வழித்தடம்



கல்கத்தா பெருநகரத்தின் சால்ட் லேக் ஐந்தாவது பிரிவிலிருந்து சால்ட் லேக் ஸ்டேடியம் வரையில் 16.5 கிலோமீட்டர் நீளமுள்ள ஆற்றுக்குக் கீழே செயல்படும் மெட்ரோ சேவைக்கான முதல் கட்ட பணிகள் நிறைவு பெற்றுள்ளன. இந்திய ரயில்வே துறையின் பொறியியல் சாதனையான இது அதிநவீனமான பாதுகாப்பு மற்றும் தகவல்தொடர்பு தொழில்நுட்பத்தை உள்ளடக்கியதாக அமைகிறது. இந்தப் பாதை முழுவதும் 2021 டிசம்பர் மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்குத் தயாராகி விடும். கிட்டத்தட்ட ரூ. 8,600 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள இத்திட்டம் இந்தப் பெருநகரத்திலுள்ள அனைவரும் விரும்பும் போக்குவரத்து வசதியாக மாறவிருக்கிறது. ஆற்றுக்குக் கீழே செல்லும் இந்த மெட்ரோ ரயில் பாதையானது கல்கத்தா மற்றும் ஹவுரா ஆகிய இரு நகரங்களையும் இணைப்பதாக அமையும். ■

## வேலைகளில் விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீட்டு வரம்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது



வேலைவாய்ப்பில் விளையாட்டு வீரர்களுக்கான இட ஒதுக்கீட்டின்கீழ் மேலும் 20 புதிய விளையாட்டுத் துறைகளை இணைக்க வேண்டுமென்ற விளையாட்டு அமைச்சகத்தின் கருத்துரையை ஊழியர் மற்றும் பயிற்சித் துறை 2020 செப்டெம்பர் 1 அன்று ஏற்றுக் கொண்டது. இதன் மூலம் மத்திய அரசு வேலை வாய்ப்புகளில் விளையாட்டுத் துறைகளில் சிறப்பான பங்களிப்பினை செய்துள்ளவர்களுக்கு வழங்கப்படும் இட ஒதுக்கீட்டிற்குத் தகுதியான விளையாட்டுத் துறைகளின் எண்ணிக்கை தற்போதுள்ள 43 லிருந்து 63ஆக அதிகரித்துள்ளது. இதன்படி உள்நாட்டைச் சேர்ந்த, பாரம்பரியமான மல்லாகாம்ப், கயிறு இழுக்கும் போட்டி, செபாக் டாக்ரோ, ரோல் பால் போன்றவையும் இவற்றில் அடங்கும். இந்த முடிவு பற்றிக் குறிப்பிட்ட இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டிற்கான துணை அமைச்சர் கிரண் ரிஜிஜு "நமது விளையாட்டு வீரர்களின் ஒட்டுமொத்த நலனை உறுதிப்படுத்துவதே அரசின் முக்கியமான அடிப்படையாக அமைகிறது. ஊழியர் மற்றும் பயிற்சித் துறையின் சிறப்பு இட ஒதுக்கீட்டிற்கான பட்டியலில் மேலும் அதிகமான விளையாட்டுத் துறைகளை சேர்ப்பதற்கான கருத்துரை அவ்வகையிலான ஒரு நடவடிக்கையே ஆகும்" என்று குறிப்பிட்டார். ■



# இந்தியாவிற்கும் உலகத்திற்கும் ஏன் காந்தி தேவை?

***ஒவ்வொரு குடிமகனுக்கும் கவுரவம், வளம் ஆகியவற்றை வழங்கும் ஓர் உலகத்தைக் கனவு கண்ட தலைவர்***

பிரதமர் நரேந்திர மோடி

1959ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வந்து சேர்ந்ததும் மதிப்பிற்குரிய டாக்டர் மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் இவ்வாறு குறிப்பிட்டார்: "மற்ற நாடுகளுக்கு நான் ஒரு சுற்றுலாப் பயணியாகச் செல்லலாம். ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரையில் புனித யாத்திரையை மேற்கொள்பவனாகவே நான் வருகிறேன்." அவர் மேலும் குறிப்பிட்டார்: " அநேகமாக, எல்லாவற்றிற்கும் மேலாக வன்முறையற்ற சமூக மாற்றத்திற்கான வழிமுறைகள் வளர்த்தெடுக்கப்பட்டதொரு பூமியாக இந்தியா விளங்குகிறது. இவற்றையே மாண்ட்கோமரி, அலபாமா மற்றும் அமெரிக்காவின் தென்பகுதி முழுவதிலும் எமது மக்கள் பயன்படுத்தினார்கள். அவை சிறப்பானவையாக இருந்ததோடு, நீடித்தவையாகவும் இருந்ததையும் நாங்கள் கண்டறிந்தோம். அவை உண்மையிலேயே செயல்படுபவைதான்!"

டாக்டர் கிங் இந்தியாவிற்கு வருவதற்கு ஊக்கமளித்த வழிகாட்டும் விளக்காகத் திகழ்ந்தவர் மகத்தான ஆத்மா என்ற பொருளுடைய மகாத்மாவான மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியே ஆவார். பாபு என்றும் அழைக்கப்பட்டு வந்த காந்திஜி இன்றும் உலகமெங்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு மனத்துணிவை தொடர்ந்து வழங்குபவராக இருந்துவருகிறார்.

காந்திய வழிப்பட்ட எதிர்ப்புக்கான வழிமுறைகள் பல்வேறு ஆப்ரிக்க நாடுகளிலும் நம்பிக்கையைத் தூண்டிவிடுவதாக அமைந்தன. டாக்டர் கிங் குறிப்பிட்டார்: "மேற்கு ஆப்ரிக்காவிலுள்ள கானா நாட்டிற்கு நான் சென்றிருந்தபோது காந்தியின் எழுத்துக்களை தான் படித்திருப்பதாகவும் வன்முறையற்ற எதிர்ப்பு நடவடிக்கைகளை அங்கு விரிவுபடுத்த முடியும் என்று தாம் நம்புவதாகவும் அந்நாட்டின் பிரதமர் எங்க்ருமா கூறினார். பேருந்துகளை புறக்கணிக்கும் இயக்கத்தை தென் ஆப்ரிக்கா நடத்தியதையும் நம்மால் நினைவுபடுத்திக் கொள்ள முடியும்." நெல்சன் மண்டேலா காந்தியை 'புனிதப் போராளி' என்றே குறிப்பிட்டு வந்தார். "ஒத்துழையாமை என்ற அவரது நடைமுறை தந்திரம், நமது ஒத்துழைப்பைக் கொண்டுதான் எவரொருவரும் நம்மை அடக்கி ஆள முடியும் என்ற அவரது துணிவான கருத்து, வன்முறையற்ற அவரது எதிர்ப்பு நடவடிக்கைகள் ஆகியவை நமது நூற்றாண்டில் உலக அளவில் காலனி ஆதிக்கத்திற்கு எதிரான, இனவெறிக்கு எதிரான இயக்கங்களுக்கு உத்வேகமாக அமைந்தன" என்றும் அவர் எழுதியிருந்தார்.

திரு. மண்டேலாவைப் பொறுத்தவரையில் காந்தி இந்தியர் மட்டுமல்ல; தென் ஆப்ரிக்கரும் ஆவார். இதை காந்தியும் கூட ஒப்புக் கொண்டிருப்பார். மனித சமூகத்திலுள்ள மிகப்பெரும் முரண்பாடுகள் சிலவற்றுக்கிடையே ஒரு பாலமாக விளங்கும் தனித்துவம் மிக்க திறமையும் அவரிடம் இருந்தது.

1925ஆம் ஆண்டில் 'யங் இந்தியா' இதழில் காந்தி எழுதியிருந்தார்: "தேசியவாதியாக இல்லாமல் ஒருவரால் சர்வதேசவாதியாகத் திகழ்வது மிகவும் கடினமாகும். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள் தங்களை ஒன்றுதிரட்டிக் கொண்டு ஒரே நபராக செயல்பட முடியும்போதுதான், அதாவது தேசியவாதம் என்பது உண்மையான ஒன்றாக மாறும்போதுதான் சர்வதேச வாதம் என்பது செயலுக்குரிய ஒன்றாக மாறும்." இந்திய

தேசியவாதம் எப்போதுமே குறுகியதானதாக அல்லது தனிப்பட்ட ஒன்றாக இருந்ததில்லை; மாறாக மனித இனத்தின் சேவைக்காகச் செயல்படும் ஒன்றாகவே அவர் அதைக் கருதினார்.

சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் இடையேயான நம்பிக்கை உணர்வின் அடையாளமாகவும் மகாத்மா காந்தி திகழ்ந்தார். குஜராத்தில் அகமதாபாதில் 1917ஆம் ஆண்டில் மிகப்பெரும் நெசவாலை வேலை நிறுத்தம் நடைபெற்றது. தீர்வு காணப்பட முடியாத வகையில் தொழிலாளிகளுக்கும் ஆலை முதலாளிகளுக்கும் இடையேயான மோதல் அதிகரித்து வந்த நேரத்தில் இப்பிரச்சனையில் சரிசமமான ஒரு தீர்வு காண்பதற்கு காந்திதான் நடுவராக இருந்தார்.

தொழிலாளர்களின் உரிமைகளுக்கென தொழிலாளர் மகாஜன் சங் என்ற அமைப்பினையும் காந்தி தோற்றுவித்தார். முதலில் பார்க்கும்போது எல்லாவற்றையும்போல இதுவும் ஒரு அமைப்பின் பெயரைப் போலத்தான் தோற்றம் அளிக்கக் கூடும். ஆனால் சிறு சிறு நடவடிக்கைகளே மிகப்பெரும் தாக்கத்தை எவ்வாறு ஏற்படுத்துகின்றன என்பதையும் அது வெளிப்படுத்துகிறது. அந்த நாட்களில் சமூகத்தில் மிக உயர்ந்த அந்தஸ்து படைத்தவர்களையே மகாஜன் என்று அழைக்கும் வழக்கம் நிலவியது. தொழிலாளர்களுக்கு மகாஜன் என்ற அடைமொழியை வழங்கியதன் மூலம் இந்த சமூக கட்டமைப்பினையே காந்தி தலைகீழாக மாற்றியமைத்தார். இவ்வாறான வார்த்தை தேர்வுகளின் மூலம் தொழிலாளர்களின் கவுரவத்தையும் அவர் உயர்த்தினார். காந்தி மிகச் சாதாரணமான விஷயங்களை வெகுஜன அரசியலோடு இணைத்தார். ஒரு சர்க்காவை, சுழலும் ஒரு சக்கரத்தை, இந்தியாவில் கையால் நூற்கும் துணியான காதியை பொருளாதார சுயச்சார்பிற்கும், நாட்டிற்கு அதிகாரமளிப்பதற்குமான வழியாக வேறு யாரால் பயன்படுத்த முடிந்திருக்கும்? ஒரு கையளவு உப்பை வைத்துக் கொண்டு மிகப்பெரும் வெகுஜன இயக்கத்தை வேறு யாரால் உருவாக்க முடிந்திருக்கும்? காலனியாட்சிக் காலத்தில் இந்தியாவில் தயாராகும் உப்பின்மீது புதிய வரியை விதித்து மேலும் சுமையை சுமத்தியது உப்பு வரி. 1930ஆம் ஆண்டில் இந்த உப்பு வரியை காந்தி எதிர்த்து நின்றார். அரேபிய கடற்கரை ஓரத்தில் நின்றபடி அவர் எடுத்த ஒரு கையளவு உப்பு வரலாற்றுச் சிறப்புமிக்க ஒத்துழையாமை இயக்கத்திற்கு வழிவகுத்தது.

உலகத்தில் இதுவரையில் பல்வேறு வெகுஜன இயக்கங்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்தியாவிலும் கூட விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு வகையான பிரிவுகள் இருந்தன. காந்திய வழிப் போராட்டத்தையும், அவரால் உத்வேகம் பெற்றவர்களையும் தனித்துக் காட்டிய விஷயம் என்னவெனில் அவரது தலைமையில் நடைபெற்ற இந்தப் போராட்டங்களில் விரிவான அளவில் மக்கள் பங்கேற்றதே ஆகும். அவர் தன் வாழ்நாளில் எந்தவொரு நிர்வாகப் பொறுப்பையும் வகித்ததில்லை; அல்லது எந்தவொரு பதவிக்கும் தேர்வு செய்யப்பட்டதில்லை. ஆட்சி அதிகாரம் அவரை எப்போதுமே கவர்ந்திழுத்ததில்லை.

அவரைப் பொறுத்தவரையில் விடுதலை என்பது அந்நியர்களின் ஆட்சியிலிருந்து விடுபடுவது என்பது மட்டுமே அல்ல. அரசியல் ரீதியான விடுதலைக்கும் தனிப்பட்ட அதிகாரம் பெறுவதற்கும் இடையில் ஆழமான தொடர்பு இருப்பதை அவர் கண்டார். உலகின் ஒவ்வொரு குடிமகனும் கவுரவும் வளமும் பெற்றவர்களாக இருக்கும் ஓர் உலகையே அவர் கனவு கண்டார். உலகம் உரிமைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது அவர் கடமைகளை வலியுறுத்தினார். 'யங் இந்தியா' இதழில் அவர் எழுதினார்: உரிமைகளின் உண்மையான ஆதாரம் என்பது கடமையில்தான் அடங்கியுள்ளது. நாம் அனைவரும் நம்முடைய கடமைகளை நிறைவேற்றினோமெனில், நாம் உரிமைகளை தேடி அலையவேண்டிய அவசியம் இருக்காது.'' ஹரிஜன் இதழில் அவர் எழுதியிருந்தார்: ''தனது கடமைகளை முறையாக நிறைவேற்றுகின்றவரிடம் உரிமைகள் தானாகவே வந்தடைகின்றன.'' ஏழைகளின் சமூக-பொருளாதார நலன்களை வலியுறுத்தும் தர்மகர்த்தா முறை என்ற கருத்தாக்கத்தையும் காந்தி நமக்கு வழங்கியிருந்தார். அதிலிருந்து நாம் உத்வேகம் பெற்று உடைமை உணர்வை அடைவது குறித்து நாம் சிந்திக்க வேண்டும். இந்தப் பூமியை வம்சாவழியாகப் பெற்றுள்ள நாம், அதனை நம்மோடு பகிர்ந்து கொள்கின்ற, அதிலுள்ள தாவரங்கள், மிருகங்கள் ஆகியவை உள்ளிட்ட அனைத்தின் நலன்களுக்கும் பொறுப்பானவர்கள் ஆவோம். நம்மை வழிநடத்திச் செல்வதற்கான மிகச்சிறந்த ஆசிரியராகவும் காந்தி நமக்கு கிடைத்துள்ளார். மனித இனத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்களை ஒன்றிணைப்பதிலிருந்து தொடங்கி, நிலைத்து நிற்கும்படியான வளர்ச்சியை முன்னெடுத்துச் சென்று, பொருளாதார ரீதியான சுயச் சார்பை உறுதிப்படுத்துவது என ஒவ்வொரு பிரச்சனைக்குமே காந்தி தீர்வுகளை தருகிறார். இந்தியாவில் உள்ள நாம் நம்மால் முடிந்த அனைத்தையும் செய்கிறோம். வறுமையை அகற்றுவதைப் பொறுத்தவரையில் மிக வேகமாகச் செயல்படும் நாடாக இந்தியா திகழ்கிறது. சுகாதார தூய்மைக்கான நமது முயற்சிகள் உலக அளவில் கவனம் பெற்றுள்ளன. சூரிய ஒளியின் மூலமான மின்சார உற்பத்திக்கான சர்வதேச கூட்டணி போன்ற முயற்சிகளின் மூலம் மறுசுழற்சிக்கான ஆதாரங்களை கையிலெடுப்பதில் இந்தியா முன்னணியில் இருந்து வருகிறது. நீடித்ததொரு எதிர்காலத்திற்காக சூரிய ஒளியின் மூலமான ஆற்றலை பயன்படுத்திக் கொள்ள பல்வேறு நாடுகளையும் இந்தக் கூட்டணி ஒன்றுதிரட்டியுள்ளது. உலகத்தோடு இணைந்தும், உலகத்திற்காகவும் நாம் மேலும் அதிகமாகச் செயலாற்றவே விரும்புகிறோம்.

காந்திக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஐன்ஸ்டைன் சவால் ஒன்றை அறிவிக்க நான் விரும்புகிறேன். காந்தியைப் பற்றி ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் கூறிய புகழ்பெற்ற வார்த்தைகள் நமக்கு தெரியும்: ''ரத்தமும் சதையுமாக இத்தகையதொரு மனிதர் இந்த உலகத்தில் வாழ்ந்தார் என்று நம்புவதற்குக் கூடத் தயங்கும் தலைமுறைகள் எதிர்காலத்தில் வரும்.''

எதிர்காலத் தலைமுறையினரும் காந்தியின் குறிக்கோள்களை நினைவில் கொள்வதை நாம் எவ்வாறு உறுதிப்படுத்த முடியும்? புதிய கண்டுபிடிப்பின் மூலம் காந்தியின் கருத்துக்களை பரப்புவதற்கு முன்வருமாறு சிந்தனையாளர்களையும், தொழில்முனைவர்களையும், தொழில்நுட்பத் தலைவர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன். வெறுப்பிலிருந்தும், வன்முறையிலிருந்தும், துயரத்திலிருந்தும் விடுபட்ட வளமானதொரு உலகமாக நமது புவிக் கோளத்தை மாற்றியமைக்க நாம் அனைவரும் தோளோடு தோள் நின்று பாடுபடுவோமாக! அப்போதுதான் மற்றவர்களின் வலியை உணர்ந்த, அவர்களது துயரத்தை நீக்குகின்ற, எப்போதுமே கர்வமற்று விளங்குபவரே உண்மையான மனிதர் என்று பொருள்படக் கூறும் 'வைஷ்ணவ ஜன தோ' என்ற அவருக்கு மிகவும் பிடித்த பாடலின் ஆழமான கருத்தை, மகாத்மா காந்தியின் கனவை நம்மால் நிறைவேற்ற முடியும். ■

**அன்பிற்குரிய பாபு, உலகமே உங்களை வணங்குகிறது!**

*(காந்திஜியின் 150வது பிறந்த தினத்தை ஒட்டி பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் எழுதிய கட்டுரை)*

"எப்போதெல்லாம் நாம் மகாத்மா காந்தியை நினைவுகூர்கிறோமோ, அப்போதெல்லாம் இயற்கையாகவே காதி நம் நினைவிற்கு வருகிறது. அது கைக்குட்டையாக இருக்கலாம்; அல்லது குளியலுக்கான துண்டாக இருக்கலாம்; அல்லது படுக்கை விரிப்பாக இருக்கலாம்; அல்லது தலையணை உறையாக இருக்கலாம்; அல்லது திரைச்சீலையாக இருக்கலாம்; அல்லது இது மாதிரியான ஏதாவது ஒரு பொருளாக இருக்கலாம். குறைந்தபட்சம் ஏதாவது ஒரு காதி பொருளை பயன்படுத்துங்கள் என்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் குடும்பத்தில் பயன்படுத்துவதற்கு அனைத்து வகையான துணிகள் மீதும் உங்களுக்கு ஆர்வமிருக்குமானால், தொடர்ச்சியாக உங்களால் காதி பொருட்களை உங்களால் வாங்க முடியும். நான் சொல்வதெல்லாம் இதுதான்: காதி பொருட்களை நீங்கள் வாங்கும்போது ஏழைகள் தீபாவளியன்று தங்கள் வீடுகளில் விளக்கேற்ற அது உதவி செய்வதாக ஆகிறது."



# காதி
## ஏற்றம் பெறுகிறது

*உற்பத்தியை நவீனப்படுத்துவது, காதி பொருட்களை வரையறை செய்வது ஆகியவற்றுக்கென 2014ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து மத்திய அரசு மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக இத்துறை பெரிதும் பயன் பெற்றுள்ளது. இன்று 389 சதவீத அளவிற்கு விற்பனை அதிகரித்துள்ளது என்பதோடு, அதன் வேலைவாய்ப்பினை வழங்குவதற்கான திறனும் பெரிதும் அதிகரித்துள்ளது. சுயச்சார்புமிக்க இந்தியா என்ற அரசின் முழக்கத்திற்கான ஒளிர்மிகு உதாரணமாக காதி தொழில் இன்று திகழ்கிறது.*

**கடந்த ஆறு ஆண்டுகளில் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் காதி மிகப் பரவலான வரவேற்பை பெற்றுள்ளது. மேலும் காதி கிராமத் தொழில் வாரியத்தின் மிகப்பெரும் வெற்றிக் கதை எழுதப்பட்டு வருவதையும் நாடு கண்ணுற்றது. கடந்த ஐந்து ஆண்டுகளில் காதி உற்பத்தி இரண்டு மடங்கிற்கும் மேலாக அதிகரித்துள்ளது. அதே காலக்கட்டத்தில் காதி விற்பனையும் சுமார் மூன்று மடங்கு**

### மோடியின் மாயவித்தை வேலை செய்கிறது. மக்கள் காதிக்கு மாறுகின்றனர்

**அக்டோபர் 4, 2014:** தில்லியில் உள்ள மது விஹார் பகுதியில் இருக்கும் ஒரு காதி கிராமோத்யோக் கடைக்கு ஒருவர் வருகிறார். ஐந்து படுக்கை விரிப்புகளையும் துண்டுகளையும் அவர் வாங்கினார். அதற்கான பணத்தை செலுத்த கவுண்டருக்குச் செல்லும்போது அவர் எத்தகைய உற்சாகத்துடன் காணப்பட்டார் என்பதை கடை ஊழியர்களிடம் அவர் கூறிய வார்த்தைகளே தெளிவுபடுத்தின: "மோடிஜியின் பேச்சைக் கேட்டபிறகுதான் நான் கடைக்கு வந்தேன். காதியை விட வேறு எதுதான் சிறந்ததாக இருக்கமுடியும் என்றுதான் நான் உணர்ந்தேன்."

**அக்டோபர் 9, 2014:** ஜார்க்கண்ட் மாநிலம் சத்ரா தொகுதியின் மக்களவை உறுப்பினரான சுனில் குமார் சிங்கிற்கு அரசு மாளிகை ஒன்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அங்கு திரைச்சீலைக்கான துணியை தேர்வு செய்ய 200க்கும் மேற்பட்ட மாதிரிகளை மத்திய பொதுப்பணித்துறை அலுவலர்கள் அவரிடம் கொண்டு வந்து காண்பித்தனர். மக்களவை உறுப்பினர் நிர்வாகப் பொறியாளரிடம் கேட்டார்: காதி அல்லது கைத்தறியினால் ஆன திரைச்சீலை உங்களிடம் உள்ளதா? அலுவலர்கள் அதற்கு அளித்த பதில்: "நமக்கு இதற்கென நிறைய துணி வேண்டியிருக்கும். நமது தேவையை நிறைவேற்றும் அளவிற்கு காதி வாரியத்தினால் துணியை தர இயலாது." அந்த அலுவலர்களிடம் மக்களவை உறுப்பினர் சொன்னார்: "நீங்கள் முன்கூட்டியே காதி வாரியத்திடம் இது பற்றி சொல்லியிருந்தால் இந்த தேவையை அவர்களால் நிறைவேற்றியிருக்க முடியும்." அதன்பிறகு மக்களவை உறுப்பினர் தேர்வு செய்வதற்கென காதியிலிருந்து பெறப்பட்ட மாதிரி துணிகளை அலுவலர்கள் அவரிடம் கொண்டு வந்து காண்பிக்க ஏற்பாடு செய்தனர்.



## புதிய மைல்கல் உருவாக்கம்

- *1956 முதல் 2013-14 வரையில் காதி துணி சராசரி உற்பத்தி 17.80 லட்சம் சதுர மீட்டர்கள்*
- *2014 முதல் 2019-20 வரையிலான 6 ஆண்டுகளில் சராசரி உற்பத்தி 1.58 கோடி சதுர மீட்டர்களாக அதிகரித்துள்ளது*

அதிகரித்துள்ளது. கே.வி.ஐ.சி.யின் 2019-20 ஆம் ஆண்டு விற்றுமுதல் ரூ.88,887 கோடியை எட்டியது. எந்தவொரு எப்.எம்.சி.ஜி. நிறுவனமும் இதை நெருங்க முடியாது. இப்போதைய அரசின் ஆட்சிக் காலத்தில், முன் எப்போதும் இல்லாத அளவுக்கு காதி பொருட்களின் பயன்பாடு எந்த அளவுக்கு அதிகரித்திருக்கிறது என்பதை, 2015-16ல் இருந்து ஆண்டுதோறும் உற்பத்தி வளர்ச்சி சராசரியாக 19.45 சதவீதம்க உள்ளது என்பதன் மூலம் தெரிந்து கொள்ளலாம். முந்தைய ஆட்சியில், அதாவது 2004 முதல் 2014 வரையிலான காலத்தில் இந்த வளர்ச்சி வெறும் 6.25 சதவீதமாக இருந்தது.

இப்போதைய அரசின் ஆட்சிக் காலத்தில் காதி பொருட்களின் விற்பனை ஆண்டுதோறும் 27.6 சதவீதம் அளவுக்கு அதிகரித்துள்ளது. இது 2004 முதல் 2014 வரையிலான காலத்தில் 6.65 சதவீதம் என குறைந்த அளவில் இருந்தது. 2015-16ல் ரூ.1,066 கோடி அளவில் இருந்த காதி பொருட்களின் உற்பத்தி, 2019-20ல் ரூ.2,292.44 கோடி அளவுக்கு அதிகரித்தது. இது 115 சதவீத உயர்வாகும். காதி துணி பொருட்களின் விற்பனை 2015-16ல் ரூ.1,510 கோடி என்ற நிலையில் இருந்து 179 சதவீதம் அதிகரித்து, 2019-20ல் ரூ.4,211.26 கோடியை எட்டியுள்ளது.

### அடுத்த தலைமுறையினருடன் பிரபலம்

காதி பொருட்களை இளைஞர்கள் மத்தியில் பிரபலப்படுத்த வேண்டும் என்று 2014-ல் பிரதமர் நரந்திர மோடி திட்டமிட்டார். அதைத் தொடர்ந்து வேறெந்த தனியார் பிராண்ட் போலவும் கே.வி.ஐ.சி.யும் மார்க்கெட்டிங் முயற்சிகளை மேற்கொண்டது. இப்போது, இந்திய - மேற்கத்திய கலாச்சார உடைகளும் இதில் கிடைக்கும். ஆடைகள் தவிர, அழகுசாதனப் பொருட்கள், சோப்புகள், ஷாம்புகள், ஆயுர்வேத மருந்துகள், தேன், எண்ணெய்கள், டீ, ஊறுகாய்கள், அப்பளங்கள் மற்றும் தோல் பொருட்களும் கே.வி.ஐ.சி.யில் கிடைக்கும். உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாட்டு வாடிக்கையாளர்களையும் ஈர்க்கும் வகையில் இவை விற்கப்படுகின்றன. இதன் காரணமாக ஐந்தாண்டு காலத்தில் கிராமப்புற தொழில்கள் மூலமான உற்பத்தி மற்றும் விற்பனை இரட்டிப்பாக உயர்ந்துள்ளது. பிரதமர் மோடியின் தொடர்ச்சியான முயற்சிகள் காரணமாகத்தான் காதி இந்த அளவுக்கு அபாரமான வளர்ச்சி பெற்றுள்ளது என்று கே.வி.ஐ.சி. தலைவர் வினய்குமார் சக்சேனா கூறியுள்ளார்.

■

### பிரதமரின் வேண்டுகோள் காரணமாக காதியில் நயமான நூற்பு உயர்வு

**புதிய உச்சத்தைத் தொட்ட உற்பத்தி & விற்பனை**

| துறை | 2013-14 | | 2019-20 | |
|---|---|---|---|---|
| | உற்பத்தி | விற்பனை | உற்பத்தி | விற்பனை |
| காதி | ₹811.08 | ₹1,081.04 | ₹2,292.44 | ₹ 4,211.26 |
| கிராமத் தொழில் | ₹25,298 | ₹26,689 | ₹65,393.40 | ₹84,675.39 |

உற்பத்தி & விற்பனை விவரம் [கோடியில்]

**வேலைவாய்ப்பு 2014-20**

தேன் மிஷன்
13,657

காதி
சுமார் 3 லட்சம்

காதி கிராமத் தொழில்
சுமார் 30 லட்சம்







# ஏராளமான புதுமைச் சிந்தனைகள்

**ஸ்டார்ட்அப் இந்தியா, அட்டல் புதுமைச் சிந்தனை மிஷன் & மேக் இன் இந்தியா போன்ற மத்திய அரசின் திட்டங்களால், உலகில் புதுமைச் சிந்தனை குறியீட்டில் முதல் 50 நாடுகளின் பட்டியலில் இந்தியா இடம் பிடித்துள்ளது.**

சமகால நிறுவனங்களுடன் போட்டியிட்டு வளர்வதற்கு எந்த ஒரு சமுதாயம் அல்லது நாடும் மாற்றங்கள் மற்றும் புதுமைச் சிந்தனைகளை ஏற்றுக் கொள்ளும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். ``கற்றலும் புதுமை சிந்தனையும் இணைந்து பயணிக்க வேண்டும். வெற்றியில் ஆணவம் ஏற்பட்டால், நேற்று நீங்கள் செய்ததே நாளைக்கும் போதுமானதாக இருக்கும் என்ற எண்ணத்தை உருவாக்கிவிடும்'' என்று ஆங்கில எழுத்தாளர் வில்லியம் போலார்டு கூறியிருப்பது பொன் வாசகங்களாக உள்ளன.

எனவே, புதுமைச் சிந்தனைகள், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியின் மீது இப்போதைய அரசு காட்டும் கவனமும், மேற்கொள்ளும் முன்முயற்சிகளும் நல்ல பலன்களைத் தருகின்றன. உலக அறிவுசார் சொத்துரிமை நிறுவனத்தின் (WIPO) குளோபல் புதுமைச் சிந்தனைக் குறியீடு (GII) 2020 ரேங்கிங் பட்டியலில் இந்தியா முதல் 50 நாடுகளுக்குள் இடம் பிடித்துள்ளதன் மூலம் இந்தியா பெரிய வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. ஸ்டார்ட் அப் இந்தியா, அட்டல் புதுமைச் சிந்தனை மிஷன், மேக் இன் இந்தியா, அட்டல் சிந்தனை சீராக்கல் ஆய்வகம், ஹேக்கத்தான் ஆகியவை புதுமைச் சிந்தனைக்கு உதவியாக



உள்ளன.

இந்திய 4 படிகள் முன்னேறியுள்ளது. குளோபல் புதுமைச் சிந்தனைக் குறியீடு 2020 ரேங்க் பட்டியலில் இந்தியா 48வது இடத்தைப் பிடித்துள்ளது. கோவிட்-19 நோய் பாதிப்பு சூழ்நிலைக்கு மத்தியில், நாட்டிற்கு இது நல்ல செய்தியாக அமைந்துள்ளது. துடிப்பான ஆராய்ச்சி & மேம்பாட்டு சூழலின் நல்ல செயல்பாட்டுக்கு அத்தாட்சியாக இது அமைந்துள்ளது.

2019ல் இந்தியா 52வது இடத்திலும், 2015-ல் 81வது இடத்திலும் இருந்தது. புதுமைச் சிந்தனை அதிகம் வளர்ந்த நாடுகளின் குழுவில் இந்தியா இடம் பெற்றிருப்பது சிறப்புக்குரிய விஷயம். மத்திய மற்றும் தெற்காசிய பிராந்தியத்தில் 2019-ன் முன்னோடி புதுமைச் சிந்தனை சாதனையாளர்களில் ஒருவராக இந்தியா இருப்பதாக WIPO ஏற்றுக் கொண்டுள்ளது.

அறிவு மூலதனம், துடிப்பான ஸ்டார்ட் அப் சூழல், அரசு மற்றும் தனியார் ஆராய்ச்சி அமைப்புகள் ஆற்றிய அற்புதமான பணி ஆகியவைதான், குளோபல் புதுமைச் சிந்தனைக் குறியீட்டில் தொடர்ந்து முன்னேறுவதற்குக் காரணங்களாக உள்ளன.

சொல்லப்போனால், நாட்டின் குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடம் புதுமைச் சிந்தனையை ஊக்குவிக்கும் உத்வேகத்தில் தேசிய கல்விக் கொள்கை 2020 முக்கியமான ஒரு நடவடிக்கையாக உள்ளது. கடந்த ஆண்டு நிதி ஆயோக் வெளியிட்ட இந்தியா புதுமைச் சிந்தனை குறியீடு, புதுமைச் சிந்தனை முயற்சிகளை அனைத்து மாநிலங்களிலும் பரவலாக்கும் முக்கிய நடவடிக்கையாக இதை ஏற்றுக் கொண்டுள்ளது. GII-ரேங்க் பட்டியலில் முன்னேறி அடுத்த பட்டியலில் முதல் 25 நாடுகளில் இடம் பிடிப்பதற்கான இரட்டிப்பு முயற்சிகளை மேற்கொள்ள நாடு இப்போது தயாராக உள்ளது. கடந்த ஆறு ஆண்டுகளில் இதுவரை வளமைமிக்க பயணமாக இருந்துள்ளது. நிமிமி 2020 அறிக்கைகளின்படி, 50,000 ஸ்டார்ட் அப் முயற்சிகளுடன், அமெரிக்கா மற்றும் பிரிட்டனுக்கு அடுத்தபடியாக, மூன்றாவது பெரிய ஸ்டார்ட் அப் பொருளாதார நாடாக இந்தியா உள்ளது.

அந்த அறிக்கைகளின்படி 2018ல் 57வது இடத்தில் இருந்த இந்தியா, 2019ல் 52வது இடத்துக்கு முன்னேறியது. ஜூரிச் நகரைச் சேர்ந்த ஸ்டார்ட் அப் சூழலியல் கண்காணிப்பு மற்றும் ஆராய்ச்சி மையமான **StartupBlink** அறிக்கையின்படி, 2019ல் முதல் 100 நாடுகளின் பட்டியலில் இந்தியா 17வது இடத்தில் இருந்தது. தனது ஸ்டார்ட் அப் சூழலியல் பலம் காரணமாக 2018ல் 37வது இடத்தில் இருந்து இந்தியா 20 இடங்கள் முன்னேறி இருந்தது. 80 குறியீடுகளின் அடிப்படையில் GII ரேங்க் பட்டியல் தயாரிக்கப் படுகிறது. ■

## 118 ஆப்களுக்கு அரசு தடை




118 செல்போன் ஆப்களுக்குத் தடை விதிக்க மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் முடிவு செய்துள்ளது. இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டுக்கு ஊறுவிளைவிக்கும் செயல்களில் ஈடுபடுவதால் அவற்றுக்குத் தடை விதிக்க முடிவு செய்யப்பட்டது.

பல்வேறு தரப்பினரிடம் இருந்து பல புகார்கள் வந்ததன் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. ஆண்ட்ராய்ட் மற்றும் iOS தளங்கள் மூலம் சில மொபைல் ஆப்கள் மூலமாக தகவல்களைத் திருடி, மறைமுகமாக இந்தியாவுக்கு வெளியில் உள்ள சர்வர்களுக்கு, அனுமதியின்றி பரிமாற்றம் செய்வதாகப் புகார் எழுந்தது.

தடை செய்யப்பட்ட ஆப்களில் பின்வருவன அடங்கும்:PUS Launcher Pro-Theme, Live Wallpapers, Smart, APUS Launcher-Theme, Call Show, Wallpaper, HideApps, Baidu, FaceU-Inspire Your Beauty, ShareSave by Xiaomi: Latest Gadgets, Amazing Deals, CamCard-Business Card Reader, WeChat Reading, Cyber Hunter, Ludo World-Ludo Superstar, Dank Tanks and PUBG MOBILE Nordic Map: Livik, PUBG MOBILE Nordic Map: Livik, PUBG MOBILE LITE



## தொழிலாளர்களுக்கு

# அதிகாரம் அளிக்கும் தொழிலாளர் நல விதிகள்



## சமூகப் பாதுகாப்பு, நல்ல சம்பளம், இலவச ஆரோக்கியம் மருந்துகள் கிடைக்கும் வசதிகளை விரிவுபடுத்துதல், பணியிட பாதுகாப்பை அதிகரித்தல் மற்றும் பாதுகாப்பை அளித்தல் ஆகியவை நான்கு தொழிலாளர் நல விதிகளில் கவனத்துக்குரிய அம்சங்களாக உள்ளன

சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் முதன்முறையாக, குழப்பமான தொழிலாளர் நலச் சட்டங்களின் பிடியில் இருந்து 50 கோடி தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கான நடவடிக்கைகளை இப்போதைய அரசு மேற்கொண்டுள்ளது. அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு கிடைக்கும் வகையில் இந்த முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

தொழிலாளர் நல சட்ட சீர்திருத்த முன்முயற்சிகளின் ஓர் அங்கமாக, ஊதியங்கள், தொழிற்சாலை உறவுகள், சமூகப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு, ஆரோக்கியமான பணிச் சூழல்கள் என்ற நான்கு அம்சங்களின் கீழ் உள்ள பல்வேறு சட்டங்களை ஒன்று சேர்த்து நான்கு விதிகளாக மாற்றியுள்ளது.

சமூகப் பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய, கண்ணியமான வாழ்க்கையை தொழிலாளர்களுக்கு அளிக்க வேண்டும் என்பது தான் இதன் நோக்கமாக உள்ளது. 93 சதவீத தொழிலாளர்கள் அமைப்புசாரா துறைகளில் இருப்பதால், அவர்களைப் பாதுகாப்பதற்கான சட்டம் எதுவும் இல்லை என்பதில் இருந்தே அவர்களுடைய பரிதாபகரமான நிலையைப் புரிந்து கொள்ள முடியும். அமைப்புசார்ந்த துறைகளில் 7 சதவீத தொழிலாளர்கள் மட்டுமே உள்ளனர்.

தொழிலாளர் சட்ட சீர்திருத்தங்கள் செய்வதில் தற்போதைய அரசு உறுதியாக உள்ளது என்று, 2014 அக்டோபர் 16 ஆம் தேதி, `ஷ்ரமேவ் ஜயதே' இயக்கத்தை தொடங்கி வைத்தபோது பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார், தொழிலாளர்கள் தான் `தேசத்தைக் கட்டமைப்பவர்கள்' என்று கூறினார்.

`ஷ்ரமேவ் ஜயதே' முயற்சியின் கீழ் ஐந்து பெரிய முன்முயற்சிகள் எடுக்கப்பட்டன. அவற்றில் `ஷ்ரம் சுவிதா முனையம்' முதன்மையானதாக இருந்தது. 16 தொழிலாளர் சட்டங்களை ஒன்று சேர்ப்பதாக இது இருந்தது. ஒரே ஆன்லைன் படிவம் மூலம் வருமான வரி கணக்கு தாக்கல் செய்யும் வசதியும் இதில் அடங்கும். தொடர்பின்றி தன்னியல்பாக ஆய்வுக்குரிய தொழில் நிறுவனங்களைத் தேர்வு செய்வதில் வெளிப்படையான முறை கொண்டு வரப்பட்டதும் இதில் அடங்கும்.ஆய்வு என்ற பெயரில் அடாவடித்தனம் செய்யும் செயல்களால் தொழில்முனைவோர் துன்பங்களுக்கு ஆளாகி வந்த நிலை இதன் மூலம் முடிவுக்கு வந்தது. இதனால் விதிகளுக்கு கீழ்ப்படியும் நிலை மேம்பட்டது.

முதன்முறையாக, அமைப்பு சார்ந்த துறையில் ஈ.பி.எப். சந்தாதாரர்களுக்கு ஒரே யு.ஏ.என். பயன்படுத்தும் வாய்ப்பு உருவாக்கப்பட்டது. இதன் மூலம் ஈ.பி.எப்.ஓ.வில் கோரப்படாமல் இருந்த ரூ.27,000 நிதியை கையாளும் வசதி கிடைத்தது.

அமைப்புசாரா துறையில் உள்ள முதிய வயது தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு கிடைப்பதற்கான வசதிகளையும் அரசு உருவாக்கியது. இதற்காக பிரதமரின் ஷிரம் யோகி மான்-தன் திட்டம் தொடங்கப்பட்டது. இதன்படி 60 வயதை எட்டிய தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.3000 ஓய்வூதியம் கிடைக்கும்.

இந்த முன்முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் நிலையில், அனைத்துத் தொழிலாளர் நல சட்டங்களையும் ஒன்று சேர்த்து நான்கு தொழிலாளர் நல விதிகளாக உருவாக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. ஊதியங்கள் பற்றிய விஷயங்களை ஒரு விதிகள் பட்டியல் கையாள்கிறது; தொழில் சார்ந்த பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியமான பணிச் சூழல்கள் பற்றியதாக மற்ற விதிகள் பட்டியல்கள் இருக்கும். சமூகப் பாதுகாப்பு பற்றிய விஷயங்களைக் கையாள்வதற்கு ஒன்றும், தொழில் உறவுகள் பற்றிய விஷயங்களைக் கையாள்வதாக இன்னொன்றும் இருக்கும். ஊதிய சட்ட விதிகள் ஏற்கெனவே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளன. மற்ற மூன்று விதிகளுக்கும் அமைச்சரவை ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.

### சட்டங்களின் சிக்கல்களில் இருந்து விடுதலை

தொழிலாளர் சட்டத்தின் பல விதிமுறைகள் பிரிட்டிஷ் காலத்தில் இருந்து அமலில் இருக்கின்றன. காலப்போக்கில், இவற்றில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. அதனால் இவை தேவையற்றதாக மாறின. தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, தடைகளை அதிகம் ஏற்படுத்துபவையாக அவை இருந்தன. தொழிலாளர்கள் பல படிவங்களைப் பூர்த்தி செய்து சிரமப்படும் அளவுக்கு, இச் சட்டங்கள் குழப்பங்கள் நிறைந்ததாக இருந்தன. அதுபோன்ற

ஒரு சூழ்நிலையில், அவை அனைத்தையும் நான்கு விதிகள் பட்டியல்களின் கீழ் கொண்டுவர அரசு விரும்புகிறது.

### குடிபெயர்ந்த தொழிலாளர்கள் மீது அக்கறை

கோவிட்-19 முடக்கநிலை காலத்தில், குடிபெயர்ந்த தொழிலாளர்கள் நலனில் பிரதமர் அக்கறை எடுத்துக் கொண்டார். நெருக்கடியான இந்த காலக்கட்டத்தில், அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை குறைந்தபட்ச அளவுக்குள் கட்டுப்படுத்திவிட வேண்டும் என்பதற்கு பல நடவடிக்கைகளை எடுத்தார். இலவச ரேஷன் பொருள்கள் வழங்குவது முதல் மற்ற நிவாரண திட்டங்களை அமல் செய்தது வரையில், அவர்களுக்கு சௌகர்யத்தை ஏற்படுத்திக் கொடுப்பதில் அரசு கவனம் செலுத்தியது.

குடிபெயர்ந்த தொழிலாளர்களின் பரிதாப நிலையைப் பார்த்து பிரதமர் வருந்தினார். இதற்கிடையில், தொடர்ச்சியாக முயற்சிகள் மேற்கொண்டதை அடுத்து, தொழிலாளர்களுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்குவதற்கான மூன்று விதிமுறைகள் உருவாக்கப்பட்டன.

இதன்மூலம், ஒரு மாநிலத்திலிருந்து வேறு மாநிலத்துக்கு செல்லும்போதும், தொழிலாளர்களுக்கு அதே விதிகள்

## சமூகப் |

### ஈ.எஸ்.ஐ.சி.யின் சமூக விரிவாக்கம்

**ஈ.எஸ்.ஐ.சி. பயன்கள் 50 வரை நீட்டிப்பு**

- அமைப்புசாரா துறைக்கு சமூகப் பாதுகாப்பு நிதியம்
- தொழிலாளர்கள் சிறிய பங்களிப்பு செய்தால் தொழிலாளர்களுக்கு இலவச மருத்துவம் மற்றும் மருந்து வசதிகளை ஈ.எஸ்.ஐ.சி. அளிக்கும்
- அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும் ஈ.எஸ்.ஐ.சி. வசதி கிடைக்கும்
- மாவட்ட அளவு வரையில் ஈ.எஸ்.ஐ.சி. மருத்துவமனைகள், மருந்தகங்கள் மற்றும் கிளைகள் விரிவாக்கம்.



### ஊதிய விதிகள்

**50** அமைப்புசாரா மற்றும் அமைப்புசார்ந்த துறைகளில் 50 கோடி தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதிய உத்தரவாதம் கிடைக்கும்

- இந்தியா சுதந்திரம் பெற்று 73 ஆண்டுகளுக்குப் பிறகு, 50 கோடி அமைப்புசார்ந்த மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களின் ஊதிய உத்தரவாதம், சமூகப் பாதுகாப்பு மற்றும் உடல் நலப்பாதுகாப்புக்காக அரசு பாடுபட்டு வருகிறது.
- ஒவ்வொரு தொழிலாளருக்கும் குறைந்தபட்ச ஊதியத்துக்கு உத்தரவாதம்

### தொழில்சார்ந்த பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்துக்கான [OSH] விதிகள்

- ஒவ்வொரு தொழிலாளருக்கும் பணி நியமனக் கடிதம்
- குடிபெயர்ந்த தொழிலாளர்கள் சொந்த ஊர் செல்ல ஆண்டுக்கு ஒருமுறை போக்குவரத்து அலவன்ஸ்.
- குடிபெயர்ந்த தொழிலாளர் தற்போது வேலைபார்க்கும் இடத்தில் தன் ரேஷன் அட்டையைப் பயன்படுத்திக் கொள்ளும் வசதி
- ஆண்டுக்கு ஒரு முறை தொழிலாளருக்கு இலவச மருத்துவப் பரிசோதனை
- எந்தத் துறையிலும் பெண்கள் பணியாற்ற அனுமதித்தல்
- இரவுப் பணியில் உள்ள பெண் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு வசதி அளித்தல்
- கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு, அவர்களுக்காக உருவாக்கப்பட்ட நிதியில் இருந்து உதவி அளித்தல்
- வருடாந்திர விடுமுறை எடுப்பதற்கான காலம் 240 நாட்களிலிருந்து 180 நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ளது, ஒவ்வொரு 20 நாள் பணிக்குப் பிறகும் ஒரு நாள் விடுப்பு நாளாக சேர்க்கப்படும்.
- புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கான தேசிய தரவு கட்டமைப்பு தயாரிக்கப்படும்

# பாதுகாப்புக்கான விதிகள்

## (சுகாதாரம் மற்றும் காப்பீடு)

**உபர், ஓலா, பிளிப்கார்ட், அமேசான், கிக் போன்ற புதிய தொழில்நுட்ப தளங்களை லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பயன்படுத்துகின்றனர்**

- தொழிலாளர் ஈட்டுறுதிக் கழக (ஈஎஸ்ஐசி) பலன்கள், அபாயகரமான தொழிற்சாலைகளில் பணியாற்றும் ஒவ்வொரு தொழிலாளருக்கும் விரிவாக்கம் செய்யப்படும்
- தோட்டக் கலைத் துறை பணியாளர்களும் தொழிலாளர் ஈட்டுறுதிக் கழக பலன்களைப் பெறுவர்
- 10-க்கும் குறைவான தொழிலாளர்களுடன் செயல்படும் தொழில் நிறுவனங்களும் கூட தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகத்தில் தாங்களாகவே முன்வந்து சேர்வதற்கு வாய்ப்பு.



- ஒவ்வொரு தொழிலாளருக்கும் உரிய காலத்தில் ஊதியம் அளிக்க உறுதி
- ஊதியத்தில் பாலினப் பாகுபாடு இல்லை
- பிராந்தியத்திற்கு ஏற்ப குறைந்தபட்ச ஊதியத்தில் உள்ள பாகுபாடு நீக்கம்

## தொழிலாளர் சேமநல நிதி கழகம் விரிவாக்கம் (ஓய்வூதியம்)

- அமைப்புசார்ந்த மற்றும் அமைப்புசாரா துறைகளில் உள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் ஓய்வூதிய (சேமநல நிதியம்) பலன்கள்.
- சுய வேலைவாய்ப்பு பிரிவைச் சேர்ந்த தொழிலாளர்கள் மற்றும் பிற சில பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்களும் தொழிலாளர் சேமநல நிதியின் கீழ் கொண்டுவரப்படுகின்றனர்
- அமைப்புசாரா துறையைச் சேர்ந்தவர்களுக்கு சமூக பாதுகாப்பு நிதிய சலுகை வழங்கப்பட உள்ளது.
- நிரந்தரப் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச பணிக் கால கட்டாயம் எதுவும் இல்லாமல் பணிக் கொடை
- குறிப்பிட்ட காலத்துக்கு பணியாற்றும் தொழிலாளர்களுக்கும் வழக்கமான பணியாளர்களுக்கு இணையான சமூக பாதுகாப்பு
- அமைப்புசாரா துறையைச் சேர்ந்த தொழிலாளர்கள் குறித்த தேசிய அளவிலான தரவுகளை ஏற்படுத்த வலைதளம் மூலம் பதிவுசெய்யலாம்
- தற்போது, 20 தொழிலாளர்களுக்கும் அதிகமாக உள்ள நிறுவனங்கள் ஆன்லைனில் காலியிடங்களை தெரிவிக்கலாம்





## தொழில் துறை நல்லுறவு விதிகள்

- தீர்ப்பாயங்கள் மூலம் தொழிலாளர்களுக்கு வேகமான நீதி
- தீர்ப்பாயங்களில் உள்ள தொழிலாளர்களின் வழக்குகளுக்கு ஓராண்டுக்குள் தீர்வுகாணப்படும்
- பணிகளை விரைவுபடுத்த தீர்ப்பாயங்களில் இரண்டு உறுப்பினர்கள்
- 51 சதவீத வாக்குகளைப் பெறும் தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களுக்கு பேச்சுவார்த்தையில் பங்கேற்க அனுமதி.
- அனைத்து சங்கங்களிலிருந்தும் குழு உருவாக்கப்படும்.
- வேலையிழக்கும் தொழிலாளருக்கு, அடல் பிமித் வியக்தி கல்யாண் யோஜனாவின் விதிமுறைகளின் படி, ஊதியம் தரப்பட வேண்டும்
- வேலையிழந்த பின், புதிய தொழில்திறனைக் கற்றுக் கொள்வதற்காக 15 நாள் ஊதியம்
- மத்திய மற்றும் மாநில அளவில் தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்படும். இந்த அங்கீகாரம் முதன் முறையாக வழங்கப்படுகிறது.



**கொரோனா காலத்தில் தொழிலாளர்களுக்கு உதவிக்கரம்**

**80** 8 மாதங்களுக்கு 80 கோடி மக்களுக்கு இலவச உணவு தானியங்கள்

- ரயில்கள் மற்றும் பேருந்துகள் மூலம் தங்களது சொந்த ஊர்களுக்கு தொழிலாளர்கள் அனுப்பிவைப்பு
- அவர்களது வீடுகளுக்கு அருகிலேயே வேலைவாய்ப்பு வழங்க பிரதமர் ஏழைகள் நல வேலைவாய்ப்புத் திட்டம்
- இந்த திட்டத்தின்மூலம், 116 மாவட்டங்களைச் சேர்ந்த 23,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இணைப்பு

பொருந்தும். இதுவரை, ஒப்பந்ததாரர்களுக்கு கீழ் பணியாற்றும் இடம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு மட்டுமே இந்த சட்டம் பொருந்துவதாக இருந்தது. புதிய விதிகளின்படி, தொழிலாளர்கள் ஆண்டுக்கு ஒரு முறை தங்களது சொந்த ஊருக்கு செல்ல போக்குவரத்து படியை தொழில் நிறுவன உரிமையாளர்கள் வழங்க வேண்டும்.

### தொழிலாளர் மற்றும் தொழில் நிறுவன உரிமையாளர்களுக்கு இடையேயான பந்தம்

தொழிலாளர்கள் மற்றும் தொழில் நிறுவன உரிமையாளர்களின் உரிமைகளுக்கு இடையே ஒரு சமநிலைத்தன்மையை 4 விதமான தொழிலாளர் விதிகள் ஏற்படுத்தும்.

**தொழிலாளர்கள் மற்றும் தொழில் நிறுவன உரிமையாளர்களுக்கு இடையேயான உரிமைகளை 4 விதமான தொழிலாளர் விதிகள் சமப்படுத்தும். இது ஜூலை 20, 2015-ல் பிரதமர், தனது உரையில் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் முடிவுசெய்யப்பட்டது.**

ஜூலை 20, 2015-ல் நடைபெற்ற இந்திய தொழிலாளர் அமைப்பின் 46-வது கருத்தரங்கின் தொடக்க விழாவில் உரையாற்றிய பிரதமர் தெரிவித்த கருத்தின் அடிப்படையிலேயே இது முடிவுசெய்யப்பட்டது. நாட்டை கட்டமைப்பதில் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் பணியாளர்கள் முக்கியப் பங்காற்ற வேண்டும் என்று பிரதமர் நம்புகிறார். தொழிலாளர் ஒருவர் மகிழ்ச்சியுடன் இல்லாவிட்டால், ஒரு நாடு மகிழ்ச்சியானதாக இருக்காது. "சமூகம் என்ற முறையில், தொழிலாளரின் கவுரவத்துக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும்," என்று பிரதமர் கூறியுள்ளார். மேலும் அவர், தொழிலாளருக்கும், நிறுவன உரிமையாளருக்கும் இடையே ஒரு பந்தம் இருக்க வேண்டும். நிறுவனத்தை இயல்பான முறையில் செயல்படச் செய்ய ஒவ்வொருவரும் பரஸ்பரம் மதிப்பளிக்க வேண்டும். தொழிலாளர் மீது இரக்க குணத்துடன் நிறுவன உரிமையாளர் செயல்பட வேண்டும். அதேபோல, தொழிலாளர்களும் செயல்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

### தொழிலாளர்கள் தங்களுக்கான சட்டத்தை புரிந்துகொண்டு, உரிமைகளைப் பெறலாம்

தொழிலாளர் சீர்திருத்தங்கள் விவகாரத்தில் அரசின் திட்டமும், நோக்கமும், அதன் முதலாவது பதவிக்காலத்திலேயே

## அமைப்புசார்ந்த மற்றும் அமைப்புசாரா துறை பணியாளர்களின் நலனில் கவனம்

50 கோடி தொழிலாளர்கள் பலத்தைக் கொண்டுள்ளது இந்தியா. இதில், 93 சதவீதத்தினர் அமைப்புசாரா துறைகளைச் சேர்ந்தவர்கள். கடும் தொழிலாளர் சட்டங்கள் இருந்தபோதிலும் அவர்களுக்கு எந்தப் பலனும் கிடைப்பதில்லை. தொழிலாளர் அமைப்புகளின் தரவுகளின்படி, அமைப்புசார்ந்த துறைகளில் உள்ள 7 சதவீத தொழிலாளர்களில் பாதிக்கும் மேற்பட்டோர், ஒப்பந்தம் அல்லது வெளிப்பணி ஒப்படைப்பு அடிப்படையில் பணியாற்றுகின்றனர். எனவே, அவர்களது உரிமைகளை அரசால் பாதுகாக்க முடிவதில்லை.

இந்த விவகாரங்களை எதிர்கொள்வதற்காக, 2002-ம் ஆண்டில் இரண்டாவது தொழிலாளர் ஆணையம் தனது அறிக்கையை சமர்ப்பித்தது. அதில், தொழிலாளர் சட்டங்களை தொழிலாளர் விதிகளாக மாற்ற வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. இருந்தாலும், கடந்த 2004-ம் ஆண்டு முதல் 2014-ம் ஆண்டு வரையான காலத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. ஆனால், 2014-ம் ஆண்டில் பிரதமர் பொறுப்பேற்றதும், தொழிலாளர் சட்டங்களை நான்கு விதிகளாக மாற்றுவதற்கு தீவிரமான சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

# அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும் சமூக பாதுகாப்பு வசதிகள்

ஒட்டுமொத்த அமைப்புசாரா துறைகளையும் சமூக பாதுகாப்பு வசதிகளின்கீழ் கொண்டுவந்து வரலாற்றுப்பூர்வமான நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது. சமூக பாதுகாப்பு விதிகளை கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கை 2011-12-ல் எழுந்தது. எனினும், ஜிஎஸ்டி அமல்படுத்தப்பட்ட பிறகு, தீவிர ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்மூலம், இது தீவிரமாக அமல்படுத்தப்பட்டது. முன்னதாக, இதுபோன்ற சீர்திருத்தத்தை மேற்கொள்ள முடியாது என்று நம்பப்பட்டது. மாநில அரசுகளிடமிருந்து அனுமதியைப் பெறுவதற்கான வாய்ப்பை ஜிஎஸ்டி எளிதாக்கியது. வரிசையில் உள்ள கடைசி மனிதரையும் அரசு சென்றடைந்துள்ளது. இந்த சமூக பாதுகாப்பு விதிகளை, எளிதான வார்த்தைகளில் சொல்வதென்றால், மிகப்பெரிய தொழிலதிபர் முதல் குப்பை பொறுக்குபவர் வரை, அனைவருக்கும் ஒரே மாதிரியான ஓய்வூதியம் மற்றும் சுகாதாரப் பலன்கள் கிடைக்கும். ஏழைகளில் ஏழைகளும் கூட, இந்த அடிப்படை



உரிமைகளிலிருந்து நீக்கப்பட மாட்டார்கள். தற்போது, மத்திய, மாநில அரசுகள் பல்வேறுபட்ட திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. இந்த அனைத்து திட்டங்களையும் ஒன்றிணைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த விதிகளில் குடிமக்கள் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளனர்: முதலாவதாக – தங்களின் நலனை தாங்களாகவே கவனித்துக் கொள்ளும் திறன்பெற்ற உயர் வகுப்பினர், இரண்டாவதாக – நிறுவன உரிமையாளரிடமிருந்து இந்த வசதிகளைப் பெறும் தொழிலாளர்கள், மூன்றாவதாக – சுகாதாரம் மற்றும் ஓய்வூதியப் பலன்களைப் பெறுவதற்கு பிரீமியம் கூட செலுத்த முடியாத ஏழைகள். சமூக பொருளாதார மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மூன்றாவது பிரிவில் 23 சதவீத மக்கள் உள்ளனர். அவர்களுக்கான செலவை அரசே ஏற்றுக் கொள்ளும். சேமநல நிதி, இஎஸ்ஐ ஆகியவற்றுக்கான செலவு, இந்த செலவினத்தின் கீழ் வரும். சேமநல நிதியை திரும்பப் பெறுவதற்கான நடைமுறைகள் அதே மாதிரியாகவே இருக்கும். இதற்கான கட்டமைப்பு தயாரானதும், தேசிய வாரியம் அமைக்கப்படும்.

*நாட்டை கட்டமைப்பதில், தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் பணியாளர்கள் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்று பிரதமர் நம்புகிறார். ஒரு தொழிலாளர் மகிழ்ச்சியாக இல்லாவிட்டாலும், நாடு மகிழ்ச்சியானதாக இருக்காது*

தெளிவாக இருந்தது. தனித்துவமான முறையில் தொழிலாளர் சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்ல மத்திய நிதியமைச்சர் தலைமையில் ஒரு குழுவை பிரதமர் அமைத்தார். தற்போதைய தொழிலாளர் சட்டங்கள், உண்மையிலேயே பயனளிக்கிறதா அல்லது நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு தடையை ஏற்படுத்துகிறதா என்பது குறித்து அவர் கவலை கொண்டுள்ளார். அரசின் இந்த முயற்சிகளுக்கு, நீதிமன்றத்தில் போராடுவதற்கு, அதிக செலவுசெய்து வழக்கறிஞர்களை நியமிக்க முடியாமல் தொழிலாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிந்ததே காரணம்.

இந்த 4 விதிகளும், இந்தியாவை புதிய உச்சத்துக்கு கொண்டுசெல்வதற்கான வரலாற்றுப்பூர்வமான நடவடிக்கையாகும். மேலும், தொழிலாளர்கள் குறித்து மக்களின் சிந்தனையில் புரட்சியை ஏற்படுத்தும். எனவே, அனைவரின் நலனுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும் நிலையில், நாட்டில் உள்ள 50 கோடி தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் கவுரவமான வாழ்க்கை முறைக்காக அரசு பணியாற்றி வருகிறது.



# விவசாயிகளைத் தொழில்முனைவோராக மாற்றுதல்

*வேளாண்மை செய்வது ஒரு தொழிலாக மாற்றப்பட்டு, இடைத்தரகர்களின் பிடியில் இருந்து விடுவிக்கப் பட்டுள்ள விவசாயிகள், வளமை மற்றும் தற்சார்பு என்ற பாதையில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது தற்சார்பு இந்தியாவுடன் இணைந்த நிகழ்வாக இருக்க வேண்டிய விஷயமாகும். குறைந்தபட்ச ஆதரவு விலையை* (**Minimum Support Price - MSP**) *உயர்த்துதல், உற்பத்தி விலையைப் போல ஒன்றரை மடங்காக அதை நிர்ணயிப்பதன் மூலம் 2022 ஆம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக உயர்த்த அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 10 கோடி விவசாயக் குடும்பங்களுக்கு அரசு நேரடியாக ரூ.7 லட்சம் கோடி பணம் செலுத்துகிறது. "ஒரு நாடு, ஒரே மாதிரியான வரி', 'ஒரு நாடு, ஒரே ரேஷன் அட்டை', அரசுப் பணிகளுக்கு 'ஒரு நாடு, ஒரே தேர்வு' என்பனவற்றைத் தொடர்ந்து, வேளாண்மைத் துறையில் 'ஒரு நாடு, ஒரே சந்தை' என்ற திட்டத்தை அறிமுகம் செய்து சீர்திருத்தங்கள் செய்வதில் குன்றாத உறுதிப்பாட்டை அரசு வெளிப்படுத்தியுள்ளது.*

**வேளாண் உற்பத்திப் பொருள் வர்த்தகம் மற்றும் வணிகம் (ஊக்குவித்தல் மற்றும் வசதி செய்து கொடுத்தல்) மசோதா 2020 மற்றும் விலை உத்திரவாதம் மற்றும் வேளாண் சேவைகளில் விவசாயிகள் (அதிகாரமளிப்பு மற்றும் பாதுகாப்பு) ஒப்பந்தம் மசோதாஆகியவை நாட்டில் இதுவரை வேளாண் துறையில் இல்லாத அளவுக்கு மிகப் பெரிய சீர்திருத்தங்களாக உள்ளன.**

விவசாயிகள் அல்லது ஏழைகளுக்கு ரொக்கமாக ஏதும் உதவி அளிக்கும்போது, அறைகளில் அமர்ந்து கொண்டு கருத்து சொல்லும் பொருளாதார நிபுணர்கள் அதை `மானியம்' என்று இழிவுபடுத்துகிறார்கள். ஆனால் அதேபோன்ற உதவி தொழிற்சாலை அல்லது வணிகத் துறைக்கு அளிக்கும்போது அதை ``ஊக்கத் தொகை" அல்லது ``பண உதவி" என்று சொல்கிறார்கள். வார்த்தைகளில் உள்ள இந்த வேறுபாடு, மனப்போக்கிலும் காணப்படுகிறதா? 2016 ஜனவரி 30 ஆம் தேதி ஊடக நிறுவனத்தின் ஒரு நிகழ்ச்சியில் பேசியபோது பிரதமர் இந்தக் கருத்துகளைத் தெரிவித்தார். விவசாயிகள் குழுவினரை சந்தித்த மறுநாள் இந்தக் கருத்துகளை அவர் கூறினார். விவசாயிகள் மீது அவருக்குள்ள அக்கறையைக் காட்டுவதாக இது உள்ளது.

விவசாய சமுதாயத்தினர் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்கு சிந்தனையை செயல்படுத்தும் வகையில், தவறான தகவல்கள் அளித்தல் மற்றும் பொய்களின் அடிப்படையிலான திட்டமிட்டப் பிரச்சாரங்களை முறியடித்து நாடாளுமன்றத்தில் இரண்டு மசோதாக்களை அரசு நிறைவேற்றியுள்ளது. மண்டி மற்றும் இடைத்தரகர் கூட்டை முறிப்பதாகவும், இடைத்தரகர்களின் பிடியில் இருந்து விவசாயிகளுக்கு விடுதலை தருவதாகவும் இந்த மசோதாக்கள் அமைந்துள்ளன.

2016இல் செங்கோட்டையில் பேசிய போது, ஒரு நாடு, ஒரே மார்க்கெட் என்ற முன்முயற்சியை பிரதமர் அறிவித்ததைத் தொடர்ந்து, அது வெறும் அறிவிப்பாக மட்டும் நின்றுவிடாமல், விரைவில் அதை நனவாக்குவதை


உறுதி செய்வதற்காக அவர் நடவடிக்கைகள் எடுத்தார். 'ஒரே பாரதம் உன்னத பாரதம்' எண்ணத்தை அமல்படுத்துவதில் இந்தியாவை ஒன்றுபடுத்தும் சர்தார் பட்டேலின் கனவு நனவாக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார். இந்தியா இன்னும் ஒன்றுபட்ட சந்தையாக ஆகவில்லை. படிப்படியாக இந்தத் திசையை நோக்கி அரசு நடவடிக்கைகள் எடுத்தது. 2016 ஏப்ரல் 14-இல் eNAM தளம் அறிமுகம் செய்யப்பட்டது என்றாலும், இப்போது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ள மசோதா, இதன் மூலம் தொழிற்சாலைகளைப் போல வேளாண்மைத் துறையும் பயன்பெறும் என்பதுடன், விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை, நாட்டின் எந்தப் பகுதியில் உள்ளவருக்கும் லாபகரமான விலைக்கு விற்க உதவியாக இருக்கும் என நிரூபிக்கப்பட்டுள்ளது. இதுவரை விவசாயிகளுக்கு `ஒரு மண்டி, ஒரே உரிமம்' ராஜ்ஜியம் மூலம் தங்கள் விளைபொருள்களை குறிப்பிட்ட வேளாண் சந்தையில் மட்டுமே விற்க முடிந்தது. இடைத்தரகர்கள் நல்ல விலை தராவிட்டால், விளைபொருளை மீண்டும் கிராமத்துக்கு எடுத்துச் செல்ல முடியாது என்பதால், அந்த இடைத்தரகர்களின் நியாயமற்ற விலை நிர்ணயத்தை ஏற்க வேண்டிய நிலை இதுவரை இருந்தது.

**குறைந்தபட்ச ஆதரவு விலை: செலவைப் போல ஒன்றரை மடங்கு**

இந்தச் சட்டங்கள் அமலுக்கு வந்ததும், குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிக்கும் நடைமுறை ஒழிக்கப்பட்டுவிடும் என்று குழப்பங்கள் ஏற்படுத்தப் படுகின்றன. இருந்தாலும், விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக ஆக்குவதில் உறுதியாக இருக்கும் இந்த அரசு, தொடர்ந்து குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்தி வருகிறது. இப்போது உற்பத்திச் செலவை விட ஒன்றரை மடங்கு அளவில் இந்த விலை நிர்ணயம் உள்ளது. 2014 முதல் 2019 வரையிலான காலத்தில் அரசு 1,870 லட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு நெல் கொள்முதல் செய்து ரூ.4.34 லட்சம் கோடி பட்டுவாடா செய்துள்ளது. 2009 முதல் 2014 வரையிலான காலத்தில் 1,670 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்து ரூ.2.88 லட்சம் கோடி பட்டுவாடா செய்யப்பட்டிருந்தது. குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்வதில் எம்.எஸ். சுவாமிநாதன் கமிஷன் பரிந்துரைகளை இப்போதைய அரசு அமல் செய்துள்ளது.


**நிலத்தின் மீது விவசாயிகள் உரிமை பறிபோகாது**

சிறு விவசாயிகளின் நிலங்களை பெருநிறுவனங்கள் கைப்பற்றிவிடுவார்கள் என்ற இன்னொரு பொய் தகவல் பரப்பப்படுகிறது. இருந்த போதிலும், விவசாயிகளுடனான பெருநிறுவனங்களுக்கான தொடர்பில் நிலத்தின் உரிமை பற்றிய எந்தப் பிரிவும் கிடையாது. உண்மையில் சொல்லப்போனால், தங்கள் வேளாண்மையை மேம்படுத்துவதற்கான பண வசதி இல்லாத 86 சதவீத விளிம்புநிலை விவசாயிகள் இந்த மசோதாக்கள் மூலம் பயன் பெறுவார்கள். அரசு ரூ.7,000 கோடி முதலீட்டில் 10,000 விவசாயி உற்பத்தியாளர் அமைப்புகளை (Farmer's Produce Organization - FAO) பலப்படுத்தி வருகிறது. இந்த அமைப்புகள் பெருநிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்ள, சிறிய மற்றும் விளிம்புநிலை




விவசாயிகளுக்கு உதவிகரமாகச் செயல்படும். விவசாயிகளிடம் யாரும் எல்லைமீறி ஆதிக்கம் செலுத்திவிடாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு, விவசாயிகளின் நிலத்தை விற்பது, குத்தகைக்கு அளித்தல் அல்லது அடமானம் வைத்தல் ஆகியவை முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளன. நஷ்டஈடு வசூலுக்கு, விவசாயி நிலத்தின் மீது எந்த ஆதிக்கமும் செலுத்த முடியாது. மேலும், ஒப்பந்தத்தில் தனியார் நிறுவனத்திற்கு கட்டுப்பாடு இருக்குமே தவிர, விவசாயிகள் மீது எந்தக் கட்டுப்பாடும் இருக்காது. முன்பணம் அல்லது எந்தப் பணத்தையும் விவசாயி பெறாமல் இருநதால், ஒப்பந்தம் கையெழுத்திட்ட பிறகும் எந்த அபராதமும் இல்லாமல் விவசாயி அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய முடியும். விவசாயி ஏதும் முன்பணம் அல்லது பணம் பெற்றிருந்தால், அப்போதும் கூட வட்டி ஏதும் இல்லாமல் அசல் தொகையைச் திருப்பிச் செலுத்திவிட்டு விவசாயி அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய முடியும். இருந்த போதிலும், தனியார் நிறுவனம் தன்னிச்சையாக ஒப்பந்தத்தை ரத்து செய்ய முடியாது. ஒப்பந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையை அந்த நிறுவனம் அளித்தாக வேண்டும். எனவே, எந்த எதிர்பாராத நேர்வுகளிலும் விவசாயி பாதிக்கப்பட மாட்டார்.

விவசாயிகளுக்கு மேலும் அதிகாரம் அளிப்பதற்கு, குறைகள் நிவர்த்திக்கு ஒரு சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதில் குறைகளை நிவர்த்தி செய்ய குறிப்பிட்ட காலக்கெடு இருக்கும். எனவே தாமதம் இல்லாமல் விவசாயிக்கு நீதி கிடைப்பது உறுதி செய்யப்படும். சர்ச்சைகள் அனைத்தும் கட்டாயமாக 30 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும். ஒப்பந்தத்திற்குப் பிறகு ஒருவேளை விலைகள் உயர்ந்தால், கூடுதல் பயன்கள் விவசாயிகளுக்கும் அளிக்கப்பட வேண்டும்.




## மண்டி கட்டணத்தில் இருந்து விடுதலை

விவசாயிகள், மண்டிகளில் 2 முதல் 8.5 சதவீதம் வரை கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. பஞ்சாப் மாநிலத்தில் இது அதிகபட்ச அளவாக உள்ளது. ஆனால், மண்டிக்கு வெளியில் இப்போது விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை விற்க முடியும் என்பதால், இந்தக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியிராது. அது அவர்களுடைய வருவாய்க் கணக்கில் சேர்ந்துவிடும்.

### விவசாயிகளுக்குச் சட்டப் பாதுகாப்பு

சுதந்திரத்திற்குப் பிறகு தொடர்ந்து சுரண்டலுக்கு ஆளாகி வந்த விவசாயிகள், இப்போது அத்தகைய கை விலங்குகளில் இருந்து முதன்முறையாக விடுதலை பெற்றிருக்கிறார்கள். புதிய சட்டங்களின் கீழ், தங்கள் விளைபொருள்களை விற்க விவசாயிகளுக்குப் பல வழிமுறைகள் உள்ளன.

நாடாளுமன்றத்தில் இந்த மசோதாக்களை நிறைவேற்றியது திருப்புமுனை தருணமாக அமைந்துள்ளது என்று பிரதமர் கூறியுள்ளார். ``இந்த நாட்டை பல தசாப்தங்களாக ஆட்சி செய்தவர்கள், இந்த விஷயத்தில் விவசாயிகளைத் தவறாக வழிநடத்துவதற்கு முயற்சிக்கிறார்கள் இடைத்தரகர்களையும், விவசாயிகளின் வருமானத்தைக் கொள்ளையடித்தவர்களையும் அவர்கள் ஆதரிக்கிறார்கள். விவசாயிகளுக்கு இனிமேல் குறைந்தபட்ச ஆதரவு விலை கிடைக்காது என்று வதந்திகளைப் பரப்புகிறார்கள். குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிப்பதன் மூலம்

> விவசாயிகள் தங்கள் விளைபொருள்கள், பழங்கள் மற்றும் காய்கறிகளை, எந்த ஊரில் உள்ளவருக்கும் விற்கும் விடுதலையை விவசாயிகளுக்கு அளிப்பதாக புதிய வேளாண்மை சீர்திருத்தங்கள் உள்ளன. தங்கள் பகுதியில் உள்ள மண்டிக்கு அப்பாற்பட்டு தனது பொருள்களை விற்க, விவசாயிகளுக்கு இப்போது நிறைய வாய்ப்புகள் உள்ளன. இப்போது மண்டியில் அதிக லாபம் கிடைக்கிறது என்றால் மண்டியில் விற்கலாம். வேறு இடத்தில் அதிக விலை கிடைத்தால், அங்கே விற்கலாம். இப்போது கட்டாயமான எந்த நெருக்குதலும் விவசாயிக்குக் கிடையாது.
>
> **பிரதமர் திரு. நரேந்திர மோடி**

விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்வதில் அரசு உறுதியாக உள்ளது. முன்பிருந்ததைப் போல அரசின் கொள்முதல்கள் தொடரும்'' என்று பிரதமர் கூறியுள்ளார். ``புதிய விதிமுறைகள் அமலுக்கு வரும் போது, விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை நாட்டில் எந்தச் சந்தையிலும் விற்க முடியும், இது வரலாற்று முக்கியத்துவமான வாய்ப்பு'' என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டபூர்வமான இந்தப் பாதுகாப்புகளுடன், 21வது நூற்றாண்டின் இந்திய விவசாயி வேளாண் செயல்பாடுகளில், பொருள்களைக் கொண்டு செல்வதில், தங்கள் விளைபொருள்களை விற்பதில் கட்டுப்பாடுகளில் இருந்து விடுதலை பெற்றவராக இருப்பார். ``பல தசாப்தங்களாக இந்திய விவசாயிகள் பல கட்டுப்பாடுகளில் சிக்கி இருந்தார்கள், இடைத்தரகர்களால் ஏமாற்றப்பட்டு வந்தனர். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள மசோதாக்கள் மூலம், இதுபோன்ற பிரச்சினைகளில் இருந்து விவசாயிகள் விடுதலை பெறுவார்கள். விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக ஆக்குவதை உறுதி செய்து, அவர்களுக்கு வளமை கிடைப்பதை உறுதி செய்வதாக இது இருக்கும்'' என்று பிரதமர் கூறியுள்ளார்.

கிசான் சம்மான் நிதி அளிப்பதன் மூலம் விவசாயிகளின் வாழ்க்கையை மாற்றும் வகையிலான மிகப் பெரிய முன்முயற்சியாக இது இருக்கும். இத் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ரூ.6,000 தொகை மூன்று சம தவணைகளில் வழங்கப்படும். எனவே அவர்கள் கடன்கள் வாங்க வேண்டிய அவசியம் இருக்காது. 2008ஆம் ஆண்டில் அரசு ரூ.72,000 கோடி விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்த போது, உண்மையில் ரூ.52 ஆயிரம் கோடி தான் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால் இப்போதைய அரசு ஒன்றரை ஆண்டுகளில் ரூ.94 ஆயிரம் கோடி அளித்து, விவசாயிகளைக் கடனில் இருந்து விடுவித்துள்ளது. அடுத்த 10 ஆண்டுகளுக்கு விவசாயிகள் மரியாதையான வாழ்க்கை வாழ்வதற்கு இத்தொகை உதவிகரமாக இருக்கும். அதில் ரூ.7 லட்சம் கோடி தொகை அவர்களுக்கு நேரடியாக கணக்கில் செலுத்தப்படும்.

# குறைந்த பட்ச ஆதரவு விலை (எம்.எஸ்.பி) நீடிக்கும்; உங்கள் பொருள்களை விற்றிடுங்கள்

**கவலைப்பட வேண்டாம், எம்.எஸ்.பி. தொடரும்:** குறைந்தபட்ச ஆதரவு விலையில் உணவு தானியங்களைக் கொள்முதல் செய்வது தொடரும் என்று மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் நரேந்திர சிங் டோமர் தெரிவித்துள்ளார். இது குறித்து பிரதமர் நரேந்திர மோடி உத்தரவாதம் அளித்திருப்பதாக அவர் கூறியுள்ளார். 2014 மற்றும் 2020க்கு இடைப்பட்ட காலத்தில் குறைந்தபட்ச ஆதரவு விலைகள் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளன. வரக்கூடிய ரபி பருவத்துக்கான திருத்தப்பட்ட குறைந்தபட்ச ஆதரவு விலைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த மசோதாக்களில் விவசாயிகளுக்கு முழுப் பாதுகாப்புக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது என்று மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் கூறினார்.



## வேளாண் உற்பத்திப் பொருள் வர்த்தகம் மற்றும் வணிகம் (ஊக்குவித்தல் மற்றும் வசதி செய்து கொடுத்தல்) மசோதா 2020

### பிரதான விதிகள்

- விளைபொருள் விற்பனை மற்றும் கொள்முதலில் விவசாயிகள் மற்றும் வர்த்தகர்கள் இடையே, தெரிந்தெடுப்பதற்கான முழு சுதந்திரமான சூழலை இது உருவாக்கும்.
- மாநிலத்துக்கு உள்ளும், மாநிலங்களுக்கு இடையிலும் தடையற்ற வர்த்தகம் நடைபெற உதவும். அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட, மாநிலத்துக்கு வெளியில் உள்ள வளாகங்களுக்குத் தடையின்றி எடுத்துச் செல்லலாம்.
- விவசாயிகள் தங்கள் விளைபொருளை விற்க செஸ் அல்லது வேறு எந்தக் கட்டணமும் செலுத்தத் தேவையில்லை. போக்குவரத்துச் செலவை ஏற்க வேண்டியதும் இல்லை.
- மின்னணு முறையில் வர்த்தகம் நடைபெறுவதை உறுதி செய்ய, மின்னணு வர்த்தகப் பரிவர்த்தனை தளம் ஒன்றை உருவாக்க அது வகை செய்கிறது.
- மண்டிகளைத் தவிர, தங்கள் நிலத்திலேயே இருந்தபடியோ, அல்லது குளிர்பதனக் கிடங்கில், சேமிப்புக் கிடங்களில், பதப்படுத்தல் மையங்களில் இருந்தோ கூட விவசாயிகள் வர்த்தகம் செய்யலாம்.
- விவசாயிகள் நேரடி சந்தையில் விற்பனை செய்ய முடியும். எனவே இடைத்தரகர்கள் குறுக்கீடு இருக்காது. விற்கும் விலை முழுக்க விவசாயிக்கே கிடைக்கும்.

### சந்தேகங்கள்

- குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்வது நின்றுவிடும்.
- மண்டிகளுக்கு வெளியில் விளைபொருள் விற்பனை நடந்தால், மண்டிகள் மூடப்பட்டுவிடும்.
- eNAM போன்ற அரசின் மின்னணு வர்த்தக முனையங்கள் என்னவாகும்?

### விளக்கங்கள்

- குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் தொடரும்; விவசாயிகள் இந்த விலையில் தங்களது விளைபொருள்களை விற்கலாம்; ரபி பருவத்துக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைகள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுவிட்டன.
- மண்டிகள் மூடப்படாது. முன்பிருந்தது போல வர்த்தகம் தொடரும். புதிய நடைமுறையின்படி, விவசாயிகள் மண்டிக்கு அப்பாற்பட்டு வேறு இடத்தில் விற்க வாய்ப்பு கிடைக்கும்.
- மண்டிகளில் eNAM வர்த்தக நடைமுறை தொடரும்.
- மின்னணு தளங்களில் வேளாண் உற்பத்திப் பொருள் வர்த்தகம் அதிகரிக்கும். அதிக வெளிப்படைத் தன்மையை அளித்து, நேரத்தை அது மிச்சப்படுத்தும்.

# உங்களுக்கு எங்கே நல்ல விலை கிடைக்கும்

## விலை உத்தரவாதம் மற்றும் வேளாண் சேவைகளில் விவசாயிகள் (அதிகாரமளிப்பு மற்றும் பாதுகாப்பு) ஒப்பந்த மசோதா



### பிரதான விதிகள்

- உணவு பதப்படுத்தல் நிறுவனங்கள், மொத்த வியாபாரிகள், பெரிய அளவிலான சில்லறை வியாபாரிகள், ஏற்றுமதியாளர்கள் போன்றவர்களுடன் சம வாய்ப்பு அடிப்படையில் விவசாயிகள் நேரடியாக ஈடுபாடு ஏற்படுத்திக் கொள்ளலாம். விதைப்புக்கு முன்னதாகவே விவசாயிகளின் பயிர்களுக்கு விலை உத்தரவாதம் கிடைக்கும். சந்தை விலை அதிகமாக இருந்தால், குறைந்தபட்ச விலைக்கு மேலான விலையை விவசாயிகளுக்கும் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.
- நிச்சயமற்ற தன்மையால் சந்தையில் பாதிப்பு ஏற்பட்டால் அதை விவசாயி ஏற்பதைவிட, உத்திரவாதமளிக்கும் ஸ்பான்சர் நிறுவனம் அதனை ஏற்க வேண்டும். முன்கூட்டியே விலை நிர்ணயிப்பதால், சந்தை விலை ஏற்றம் மற்றும் சரிவுகளில் இருந்து விவசாயி பாதுகாக்கப்படுகிறார்.
- நவீன தொழில்நுட்பம், நல்ல விதை மற்றும் இதர இடுபொருள்கள் ஆகியவை இதன் மூலம் விவசாயிகளுக்குக் கிடைக்கும்.
- சந்தைச் செலவைக் குறைத்து விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும்.
- சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கு காலக்கெடுவுடன் கூடிய நடைமுறை உருவாக்கப்பட்டுள்ளது.
- வேளாண்மைத் துறையில் ஆராய்ச்சி மற்றும் நவீனத் தொழில்நுட்பம் உருவாக்கலுக்கு உத்வேகம் அளிக்கப்படும்.

### சந்தேகங்கள்

- ஒப்பந்த வேளாண்மையில், விவசாயிகள் நெருக்கடியில் சிக்குவார்கள், விலையை நிர்ணயிக்க முடியாது.
- சிறு விவசாயிகள் எப்படி ஒப்பந்த வேளாண்மையில் பங்கேற்க முடியும், ஸ்பான்சர் நிறுவனங்கள் அவற்றைப் புறக்கணிக்கும்
- புதிய நடைமுறை, விவசாயிகளுக்குப் பிரச்சினையாக இருக்கும்.
- சர்ச்சை எழுந்தால் பெரிய கம்பெனிகளுக்கு தான் சாதகம் கிடைக்கும்.



### விளக்கங்கள்

- தன் விளைபொருளை விற்பதற்கான விலையை நிர்ணயிப்பதில் விவசாயிக்குத் தான் முழு அதிகாரமும் உள்ளது. தங்களுக்குரிய பணத்தை, அதிகபட்சம் 3 நாட்களில் அவர்கள் பெறுவார்கள்.
- விவசாயிகளின் உற்பத்தியாளர் அமைப்புகள் 10,000 நாடு முழுக்க உருவாக்கப் படுகின்றன. இந்த அமைப்புகள் சிறு விவசாயிகளை ஒன்று சேர்த்து, அவர்களின் வேளாண் விளைபொருளுக்கு நல்ல விலை கிடைப்பதை உறுதி செய்யும்.
- ஒப்பந்தம் கையெழுத்திட்ட பிறகு, நுகர்வோர் நேரடியாகத் தோட்டத்தில் இருந்து விளைபொருளை எடுத்துக் கொள்வார்.
- உள்ளூர் சர்ச்சைத் தீர்வு நடைமுறைக்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

# படிப்படியாக விவசாயிகளுக்கு

விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்க அரசு எப்படி படிப்படியாக நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என்பதைப் பார்த்தால், வேளாண்மைத் துறைக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தை உணர முடியும். வேளாண் உற்பத்தியை அதிகரிக்க, விவசாயிகளைப் பாதுகாக்க, அவர்களின் வருவாயைப் பெருக்க, ஒட்டுமொத்தமாக அவர்களின் நலனைப் மேம்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. எளிதாக உரம் கிடைத்தல், எளிதாகக் கடன் கிடைத்தல், பயிர்க் காப்பீட்டுத் திட்ட வசதி, அறிவியல்பூர்வமான ஆதரவு, விளைபொருளுக்கு நல்ல விலை கிடைத்தல் போன்ற அரசின் பல நடவடிக்கைகள் மூலம் விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர்.

## விதைப்புக்கு முன்

**மண்வள அட்டை:** சரியான தேர்வை விவசாயிகள் செய்ய இது உதவுகிறது. 22.39 கோடி மண் வள அட்டைகளை அரசு விநியோகித்துள்ளது.

**உரங்கள்:** உரங்களை வாங்க நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டும் என்பதெல்லாம் கடந்தகால விஷயங்களாகிவிட்டன. விவசாயிகள் எளிதாக உரம் பெறுவதை அரசு உறுதி செய்துள்ளது. உரங்களின் விலைகளும் கணிசமாகக் குறைந்துள்ளன. யூரியாவில் 100 சதவீத வேம்பு பூச்சு உள்ளது. யூரியா உரம் பயன்பாட்டின் அளவு இதன் மூலம் குறைந்துள்ளது.

வேளாண்மையில் பணம் கிடைக்காமல் போவது, விவசாயிகளுக்குப் பிரச்சினையாக உள்ளது. ஆனால் இப்போது விவசாயிகள் குறைந்த வட்டியில் எளிதாகக் கடன் பெறலாம்.

### தற்சார்புத் தொகுப்புத் திட்டம்

2022 ஆம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக ஆக்குவதற்கு அரசு ஓய்வின்றி உழைத்து வருகிறது. கோவிட்-19 நெருக்கடியையும் அரசு ஒரு வாய்ப்பாக மாற்றியுள்ளது. விவசாயக் கட்டமைப்புக்கு ரூ.1 லட்சம் கோடி செலவிட அரசு திட்டமிட்டிருப்பது, உணவு பதப்படுத்தலுக்கு ரூ.10,000 கோடி ஒதுக்கீடு, தேனீ வளர்ப்புக்கு ரூ.500 கோடி ஒதுக்கீடு என்பதில் இருந்து, வேளாண்மைத் துறைக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது என்பதை அறியலாம். வேளாண்மைக் கட்டமைப்பு நிதியம் உருவாக்க 2020 ஜூன் 8 ஆம் தேதி அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, 2020 ஆகஸ்ட் 9 ஆம் தேதி தொடங்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ், அடுத்த 4 ஆண்டுகளில் அரசு ரூ.1 லட்சம் கோடி செலவிடத் திட்டமிட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டில் 2020-21 ஆம் ஆண்டில் ரூ.10,000 கோடி செலவிடப்படும். அதற்கடுத்த 3 நிதியாண்டுகளில் ஆண்டுக்கு ரூ.30 ஆயிரம் கோடி செலவிடப்படும். ரூ.2 கோடி வரையிலான கடன்களுக்கு 2 சதவீதத் தள்ளுபடி அளிக்கப்படும். வேளாண் கட்டமைப்புகளை உருவாக்குதல், தொடக்க வேளாண்மைக் கடன் சங்கம் (Primary Agriculture Credit Society - PACS), விவசாயி உற்பத்தியாளர் அமைப்புகளை (எப்.பி.ஓ.) உருவாக்குதல், வேளாண் தொழில்முனைவோர் வசதியை உருவாக்குதல், அறுவடைக்குப் பிந்தைய உதவிகளை அளித்தல் ஆகிய பணிகள் இதில் மேற்கொள்ளப்படும்.

### விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்கிட...

2016 பிப்ரவரி 28 ஆம் தேதி பரேலியில் கிசான் மாநாட்டில் உரையாற்றிய பிரதமர், விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக ஆக்குவது பற்றிப் பேசிய போது, அவருடைய மனதில் உறுதியான ஒரு திட்டம் இருந்தது. ``இந்த நாடு சுதந்திரம் பெற்றதன் 75வது ஆண்டு விழாவை 2022இல் கொண்டாடும் போது, விவசாயிகளின் வருமானம் இரட்டிப்பாக உயர்ந்திருக்கும்'' என்று அவர் உறுதியாகக் கூறினார்.

அப்போதிருந்து, நாட்டில் வேளாண்மைத் துறையின் நிலையை உயர்த்துவதற்கு அரசு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. இரு புதிய வேளாண்மை மசோதாக்களும், இதற்கான பாதையில் மிகப் பெரிய சீர்திருத்தங்களைச் செய்வதாக இருக்கும். இந்த அரசு ஆறு ஆண்டுகளாக தொடர்ந்து மேற்கொண்டு வரும் முயற்சிகள் இப்போது விவசாயிகளுக்கு வளமை சேர்க்கத் தொடங்கியுள்ளன.

பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு எடுத்துள்ள முடிவுகள், விவசாயிகளுக்கு நல்ல காலம் வந்துவிட்டதை உணர்த்துபவையாக உள்ளன. மீண்டும் ஒருமுறை குறைந்தபட்ச ஆதரவு விலைகளை உயர்த்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஒரு குவிண்டால் கோதுமைக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை ரூ.50, பயறுகளுக்கு ரூ..225, பார்லிக்கு ரூ.75, பருப்புகளுக்கு ரூ.300 அளவுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப் பட்டிருப்பதாக மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் நரேந்திர சிங் டோமர் தெரிவித்துள்ளார்.

# அதிகாரம் அளிப்பு



## விதைக்கும் போது


- பாசன வசதிகள் உறுதி செய்யப்படும்
- விவசாயிகளுக்கு ஆதரவு மற்றும் வழிகாட்டுதல்
- குறுஞ்செய்தி, தொலைபேசி அழைப்புகள் மூலம் அறிவியல்பூர்வமான யோசனைகள் கோடிக்கணக்கான விவசாயிகளுக்கு அனுப்பப்படுகின்றன.

## விதைப்புக்குப் பின்

### பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம்

குறைந்தபட்ச கட்டணத்துடன் விவசாயிகளுக்கு இத் திட்டம் கிடைக்கிறது. இத் திட்டத்தின் கீழ் ஒரு பயிருக்கு ஒரு கட்டணம், அதாவது காரிப் பயிர்களுக்கு 2%, ரபி பயிர்களுக்கு 1.5% என இருக்கும். காப்பீட்டுக் கட்டணத் தொகைக்கு உச்சவரம்பு கிடையாது. ஈட்டுத் தொகை குறைக்கப்படாது. சுதந்திரத்திற்குப் பிறகு, இத் திட்டம் தொடங்கப்படும் வரையில் 20 சதவீத விவசாயிகள் மட்டுமே காப்பீட்டுப் பயன்களைப் பெற்று வந்தனர்.

**eNAM:** eNAM என்ற ஒருங்கிணைந்த இணையவழி சந்தை மூலம் வாங்குபவர் மற்றும் விற்பவருக்கு சரியான தகவல் கிடைப்பதன் மூலம், உடனுக்குடன் விலை மாற்றங்களை அறியலாம். தேடுதல் மற்றும் ஏல நடைமுறைளில் வெளிப்படைத்தன்மை ஏற்பட்டு, ஊக்குவிக்கப்படும்.




### அரசுக்கு ஆதரவான விவசாயிகள் அமைப்புகள்

வேளாண்மை சீர்திருத்த மசோதாக்களை நிறைவேற்றியதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாய அமைப்புகள் அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளன. மகாராஷ்டிரா ராஜூ ஷெட்டி (ஸ்வாபிமானி ஷெட்காரி சங்கட்டனா) மற்றும் அனில் க்வாட் (ஷெட்கரி சங்கட்டன்) போன்ற மகாராஷ்டிர மூத்த விவசாய அமைப்புத் தலைவர்களுடன், கான்பூர், மொராதாபாத், கோரக்பூர், துலே, கதுவா, ஜபல்பூர் விவசாயிகள், மண்டி நடைமுறையும், குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணய நடைமுறையும் தொடரும் என தெரிவித்துள்ளனர். இதில் எந்த வகையிலும் புதிய வேளாண் மசோதாக்கள் தலையிடவில்லை என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். புதிய வேளாண் மசோதாக்கள் விவசாயிகள் நலன்களைக் கருத்தில் கொண்டவையாக உள்ளன என்று பல பத்திரிகைகள் தலையங்கங்கள் தீட்டியுள்ளன. ■

### விவசாயிகள் நலன் நடவடிக்கைகள்

**கிசான் ரயில்:** அரசு முதலாவது கிசான் ரயிலை இயக்கி வைத்துள்ளது. தேசிய குளிர்பதன வழங்கல் சங்கிலித் தொடர் அமைப்பை ஏற்படுத்துவதில் இது முக்கியமான பங்கினை வகிக்கும். தங்கள் விளைபொருள்களுக்கு விவசாயிகள் நல்ல விலை பெறுவது இதன் மூலம் உறுதி செய்யப்படும்.

**சம்மான் நிதி:** ஒவ்வொரு விவசாயக் குடும்பத்திற்கும் ஆண்டுக்கு ரூ.6,000 நேரடியாக வங்கிக் கணக்கில் செலுத்தப்படும். 10 கோடி விவசாயிகளுக்கு ரூ.94 ஆயிரம் கோடி தொகை செலுத்தப்பட்டுள்ளது.

**உற்பத்தி:** பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தி 52 சதவீதம் அதிகரித்துள்ளது. காரிப் பயிர் விதைப்பு 13.92 சதவீதம் அதிகரித்துள்ளது. நெல் சாகுபடி பரப்பு 19.04 சதவீதம் அதிகரித்துள்ளது. ஆர்கானிக் விளைபொருள்கள் ஏற்றுமதி 2020 ஜூலை வரையில் 78 சதவீதம் அதிகரித்துள்ளது.

**வருவாய்:** விவசாயிகள் வருவாய் 20சதவீதத்திலிருந்து 68 சதவீதமாக உயர்ந்துள்ளது.

**ஸ்டார்ட் அப்:** இளைஞர்களிடம் வேலைவாய்ப்பை உருவாக்கவும், விவசாயிகளின்வருவாயைப் பெருக்கவும் வேளாண்மைத் தொடர்பான 346 தொடக்கநிலை நிறுவனங்களுக்கு ரூ.3,671.75 லட்சம் அளிக்கப்படுகிறது.

**தோட்டக்கலை:** கடந்த ஐந்து ஆண்டுகளில் தோட்டக்கலைத் துறையில் ரூ.10,500 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. புதிய தொழில்நுட்பங்களில் 8.83 லட்சம் விவசாயிகள் பயிற்சி பெறவுள்ளனர்.

**பாசனம்:** சிறு பாசனம் மூலம் தண்ணீர்ப் பயன்பாடு செம்மையாகியுள்ளது. பாசனத்திற்கான செலவு 50சதவீதமாகக் குறைந்துள்ளது. உரங்களின் பயன்பாடு 42 சதவீதமாகக் குறைந்துள்ளது. ரசாயன உரங்களுக்குப் பதிலாக, வேம்பு தடவிய உரங்கள் பயன்படுத்தப் படுகின்றன.



# பெரிய நீலப் புரட்சி





*ரூ.20,000 கோடி முதலீட்டில் மீன் பண்ணைகள் உருவாக்கும் பேராவல் மிகுந்த திட்டம், ஏற்றுமதிக்கு நல்ல வாய்ப்புள்ள இந்தத் துறையை நவீனப்படுத்தவும், மீன்பிடித்த பிறகு ஏற்படும் இழப்புகளைக் குறைத்து, 21 மாநிலங்களில் புதிய வாய்ப்புகளை உருவாக்கவும் உதவும்.*

**உலகில் பெரிய பொருளாதார நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது. அதன் அளவின் அடிப்படையில் இப் பட்டியலில் இடம் பிடித்துள்ளது. உலகில் மீன் ஏற்றுமதியில் 4வது பெரிய நாடாக இருக்கும் இந்தியா, மீன்வளத் துறையில் மேலும் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காகத் திட்டமிட்டுள்ளது. இத் துறையில் தொடர்புகளை பலப்படுத்துவதற்காக பணியாற்றுவது இப்போது அவசியமானது. இந்தத் தேவையை உணர்ந்ததால், அரசு அதற்கான பணிகளை மேற்கொண்டுள்ளது.**

**எனவே, பிரதமரின் மத்ஸ்ய சம்பட யோஜ்னா (PMMSY) திட்டம், இ-கோபாலா ஆப் மற்றும் மீன்வளம், பால் பொருட்கள், கால்நடை பராமரிப்பு மற்றும் வேளாண்மைத் துறை ஆய்வுகளில் தொடர்புடைய பல்வேறு**

## ஐந்து தூண்கள்

**1** மீனவர்கள் மற்றும் விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்குதல்

**2** இப்போது ஆண்டுக்கு 150 லட்சம் டன்கள் என்று உள்ள மீன் உற்பத்தியை அடுத்த 5 ஆண்டுகளில், ஆண்டுக்கு 220 லட்சம் டன்களாக உயர்த்துதல்

**3** ஆண்டு வருமானத்தை இப்போதைய ரூ.46,600 கோடி என்ற அளவில் இருந்து, ஆண்டுக்கு ரூ.1 லட்சம் கோடி என உயர்த்துதல்

**4** மீன்பிடித்த பிறகு ஏற்படும் இழப்பை 20-25 சதவீதம் என்பதில் இருந்து 10 சதவீதமாகக் குறைத்தல்

**5** இத் துறையில் 55 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்

## அலைகளை உருவாக்குதல்

- 2014 ஆம் ஆண்டு மத்திய அரசு `நீலப் புரட்சியை' அறிவித்தது. முதலாவது ஆட்சிக் காலத்தில் இத் துறையில் அரசு ரூ.2600 கோடி முதலீடு செய்தது. 1947ல் இருந்து 67 ஆண்டுகளில் இத் துறையில் மொத்த முதலீடு ரூ.3,682 கோடியாக இருந்தது.
- 2014ல் இருந்து புத்துணர்வான மாற்றம் இத் துறையில் ஏற்பட்டது. உற்சாகம் தரும் வகையில் துறையின் செயல்பாடு அதிகரித்து, ஆண்டு வளர்ச்சி விகிதம் 5.2 சதவீதம் என்பதில் இருந்து 11 சதவீதமாக உயர்ந்தது.



- கடந்த 2014ம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டுகளில் மீன் வளர்ப்பில் வளர்ச்சி விகிதம் அதற்கு முந்தைய ஆண்டுகளில் இருந்த 4.7 சதவீதத்திலிருந்து 7.53 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- மீன் ஏற்றுமதியும் ரூ. 46,662 கோடிக்கு நடைபெற்றுள்ளது. இது 2014-15 ஆம் ஆண்டில் இருந்ததை காட்டிலும் 2018-19 ஆம் ஆண்டில் 9.71 சதவீத வளர்ச்சியைடைந்துள்ளது.



## மீன்வளத் துறை நீடித்த செயல்திறன் கொண்டதாக மாறும்

- புதிய திட்டத்தின் கீழ் மீன்பிடி கலன்களுக்குக் காப்பீடு அளிக்கப்படுகிறது; கலன்கள் தரம் உயர்த்திக் கொள்ள, படகுகள் வாங்க, பயோ-கழிப்பறைகள் அமைக்க, உப்பு நீரில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு, காரத்தன்மை பகுதிகளில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு, கடல் மித்ரா, இனப்பெருக்க தாய் மையங்கள், மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின ஸ்டார்ட் அப் ஆப்கள், ஒருங்கிணைந்த அக்குவா பூங்கா, ஒருங்கிணைந்த கடலோர மீன்பிடி கிராமங்கள் மேம்பாடு, நீர்வாழ் உயிரின ஆய்வகங்களின் நெட்வொர்க் மற்றும் அவற்றுக்கான வசதிகள், இ-வணிகம், மார்க்கெட்டிங் போன்றவற்றுக்கு நிதி உதவி அளிக்கப்படும்.
- முதலாவது கட்டத்தில் 21 மாநிலங்கள் & யூனியன் பிரதேசங்களில் ரூ.1,720 கோடி மதிப்பிலான திட்டங்கள் அமல் செய்யப் படுகின்றன. உற்பத்தி, தரமான தொழில்நுட்பம், மீன்பிடித்தலுக்குப் பிறகு பராமரிப்பதற்கான கட்டமைப்பு மற்றும் மேலாண்மை வசதிகளில் உள்ள குறைபாடுகளுக்குத் தீர்வு காண பிரதமரின் மத்ஸ்ய சம்பட யோஜ்னா மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். துடிப்பான மீன்பிடி மேலாண்மைக் கட்டமைப்பு உருவாக்குவதையும், மீனவர்களின் நலன்களை மேம்படுத்துவதையும் இத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத் துறையின் நீடித்த வளர்ச்சிக்கான திட்டம். அடுத்த 5 ஆண்டுகளில் ரூ. 20,050 கோடி முதலீட்டில் தற்சார்பு இந்தியா திட்டத்தின் கீழ் இது அமல் செய்யப்படும். இதில் கடல்வளம், மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு தொடர்பான செயல்பாடுகளுக்கு ரூ.12,340 கோடி செலவிடப்படும்.

முன்முயற்சிகளை 2020 செப்டம்பர் 10 அன்று காணொலி மூலம் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.

நாட்டில் 21 மாநிலங்களில் மத்ஸ்ய சம்பட யோஜ்னா திட்டம் ரூ.20,000 கோடி முதலீட்டில் தொடங்கப்படுகிறது. இத் தொகை அடுத்த 4-5 ஆண்டுகளில் செலவிடப்படும். இதில் ரூ.1,700 கோடிக்கான திட்டங்கள் 2020 செப்டம்பர் 10 ஆம் தேதி தொடங்கப்பட்டன. ``நமது கிராமங்களுக்கு அதிகாரம் கிடைக்கச் செய்து தற்சார்பு நிலையை 21 ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்த வேண்டும் என்ற உத்வேகத்துடன் இந்தத் திட்டங்கள் தொடங்கப்

பட்டிருப்பதாக'' பிரதமர் கூறினார்.


புதிய கட்டமைப்பு வசதி, நவீன சாதனங்கள் மற்றும் மீன் உற்பத்தியாளர்கள் புதிய மார்க்கெட்களுடன் தொடர்பு கொள்ளும் வசதி, மீன் பண்ணைகள் அமைக்கவும் மற்ற வசதிகளை உருவாக்கவும் கூடுதல் வாய்ப்புகள் இத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் என்று பிரதமர் கூறினார். நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, மீன்வளத் துறைக்கு இவ்வளவு பெரிய திட்டம் தொடங்கப் படுவது இதுதான் முதல்முறை என்று அவர் தெரிவித்தார். 2014க்கு முன்பு முந்தைய அரசு இத் துறைக்கு ரூ.3,682 கோடி ஒதுக்கீடு செய்தது. ஆனால் 2014க்குப் பிறகு இதுவரையில் அரசு ரூ.2,600 கோடி முதலீடு செய்துள்ளது. கூடுதலாக ரூ.20,000 கோடி முதலீட்டுக்கு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

அடுத்த 3-4 ஆண்டுகளில் மீன் ஏற்றுமதியை இரட்டிப்பாக ஆக்க வேண்டும் என்ற இலக்கு நிர்ணயித்திருப்பதால், மீன்பிடி துறையில் மட்டும் பல மில்லியன் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும். முக்கியமான இடைவெளிகளை சரி செய்தல், நவீன தொழில்நுட்பம் மூலம் இத் துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், முக்கிய கட்டமைப்பு வசதிகளை தரம் உயர்த்துதல், மதிப்பு சங்கிலித் தொடரை பலப்படுத்துதல், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் ஆகிய பலன்கள் இத் திட்டம் மூலம் கிடைக்கும். மீன்பிடி தொழிலுடன் தொடர்புடையவர்களுக்கு நலத் திட்ட பயன்கள் கிடைப்பதை இது ஊக்குவிக்கும்.

சுதந்திரத்திற்குப் பிறகு மீன்வளத் துறையில் இவ்வளவு பெரிய அளவிற்கு முதலீடு செய்யப்படுவது இதுதான் முதல்முறை என்று கூறிய பிரதமர், வரக் கூடிய ஆண்டுகளில் ஏற்றுமதியை இரட்டிப்பாக ஆக்க வேண்டும் என்பது தான் நோக்கம் என்று குறிப்பிட்டார். மிக முக்கியமாக, மீன்வளத் துறையை அதிகபட்ச அளவுக்கு பயப்படுத்திக் கொள்வதற்காக தனியாக அமைச்சகம் உருவாக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் தெரிவித்தார். மேலும் கங்கை நதியை தூய்மைப்படுத்துதல், மிஷன் டால்பின் ஆகியவை மூலமும் மீன்பிடி துறை பயன்பெறும் என்றார் அவர். ``மீன் பண்ணை மற்றும் வேறு வழிகளில் வருமான வாய்ப்புகள் பெருகும்'' என்று பிரதமர் கூறினார். இந்த முன்முயற்சி மீன்பிடித்தல், பால் மற்றும் தேன் உற்பத்தி பெருக்கத்திற்கு ஊக்கம் அளிக்கப்படும். இதனால் நீலப்புரட்சிக்கு வழி வகுக்கப்படும் என்று அவர் கூறினார். ■

## கால்நடைகளுக்கு மெய்நிகர் மார்க்கெட் வசதியை உருவாக்கும் இ-கோபாலா

கால்நடைகளுக்கான மார்க்கெட் வசதியை இ-கோபாலா ஆப் வழங்கும். இத் திட்டத்தின் கீழ் பிகாரில் பாட்னா, புர்ணியா, சீதாமார்ஹி, மாதேபுரா, கிஷண்காஞ்ச், சமஸ்டிபூர் மாவட்டங்களில் பல வசதிகள் உருவாக்கப் பட்டுள்ளன. மாநில மக்கள் தொகையில் 89 சதவீதம் பேர் கிராமங்களில் வசிப்பதாலும், அதில் 76 சதவீதம் பேர் வேளாண்மை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறைகளை நம்பி வாழ்வதாலும், பிகாருக்கு இத் திட்டம் முக்கியமானதாக உள்ளது.




கால்நடைகள் வளர்ப்பவர்கள் இ-கோபாலா ஆப் மூலம், தங்களுடைய கால்நடை பராமரிப்பு குறித்த அனைத்து தகவல்களையும் பெறலாம். கால்நடைகளை இதன் மூலம் அவர்கள் வாங்கலாம், விற்கலாம், தரமான இனப்பெருக்க சேவைகள் குறித்த தகவல்களை இதன் மூலம் பெறலாம். ஆயுர்வேத மருந்துகள், கால்நடைகள் வளர்ப்புக்கான வழிகாட்டுதல்கள், மற்றும் தடுப்பூசி உள்ளிட்ட பொருத்தமான எல்லா தகவல்களும் இதன் மூலம் கிடைக்கும்.

பிரதமரின் மத்ஸ்ய சம்பட யோஜ்னா திட்டத்தின் கீழ், சீதாமார்ஹியில் மீன்குஞ்சு பொரிக்கும் நிலையம் அமைக்கப்படும் என்றும், கிஷண்காஞ்ச்சில் நீர்வாழ் உயிரின நோய் பரிந்துரை ஆய்வகமும் அமைக்கப்படும் என்று பிரதமர் அறிவித்தார். இவற்றுடன் மாதேபுராவில் மீன்தீவன தயாரிப்பு நிலையம் ஒன்றையும், பாட்னாவில் `நடமாடும் மீன் விற்பனை நிலையங்களையும்' பிரதமர் தொடங்கி வைத்தார். ராஜேந்திரபிரசாத் மத்திய வேளாண் பல்கலைக்கழகத்தில் விரிவான மீன் உற்பத்தி தொழில்நுட்ப மையத்தையும் பிரதமர் தொடங்கி வைத்தார். கால்நடைப் பல்கலைக்கழகத்தில் ஐ.வி.எப். ஆய்வகமும் தொடங்கப்பட்டது.

SCAN QR CODE FOR COMPLETE INFORMATION ON PMMSY



# புதிய வளமைக்குள் அடியெடுத்து வைக்கிறது பிகார்

பங்கேற்புடன் கூடிய வளர்ச்சிக்கான பல திட்டங்களை மத்திய அரசு தொடங்கியுள்ளது. புதிய தண்ணீர் வழங்குதல், நதிகள் பகுதி, நெடுஞ்சாலைகள் மேம்பாடு முதல் கழிவுநீர் சுத்திகரிப்பு வரையில் வளர்ச்சிக்கான இயக்கம் தொடர்கிறது.

மாநிலங்களின் வளர்ச்சியில் அரசு எப்போதும் கவனம் செலுத்தி வருகிறது. குறிப்பாக கிழக்குப் பகுதி மாநிலங்களில் கவனம் செலுத்துகிறது. அதில் பிகார் மாநிலம் மிக முக்கியமானதாக உள்ளது. நாட்டின் கிழக்குப் பகுதியின் வளர்ச்சி குறித்து பிரதமர் நரேந்திர மோடி எப்போதும் பேசி வருகிறார். கள அளவில் அந்த வளர்ச்சியை நனவாக்குவதற்கு, `நமாமி கங்கை' மற்றும் புத்துயிரூட்டும் மற்றும் நகர்ப்புற நிலை மாற்றத்துக்கான அட்டல் மிஷன் (அம்ருட் - AMRUT) திட்டத்தின் கீழ் பிகாரில் 2020 செப்டம்பர் 15 ஆம் தேதி பல்வேறு திட்டங்களை பிரதமர் தொடங்கி வைத்தார்.

2020 செப்டம்பர் 15 ஆம் தேதி தொடங்கி வைக்கப்பட்ட நான்கு திட்டங்களில், பாட்னாவில் பெயூர் மற்றும் கரமலிச்சாக்கில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், அம்ருட் திட்டத்தின் கீழ் சிவான் மற்றும் சாப்ரா மாவட்டங்களில் தண்ணீர் தொடர்பான திட்டங்கள் ஆகியவை அடங்கும். இவை தவிர, முங்கெர் மற்றும் ஜமால்பூர் தண்ணீர் வழங்கும் திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டப்பட்டன. முசாபர்பூர் மாவட்டத்தில் நமாமி கங்கை திட்டத்தின் கீழ் நதிப்பகுதி வளர்ச்சித் திட்டத்திற்கும் அடிக்கல் நாட்டப்பட்டது. அம்ருட் மற்றும் மாநில அரசுத் திட்டங்கள் மூலம் பிகாரில் நகர்ப்புற பகுதிகளில் கடந்த 4-5 ஆண்டுகளில் பல லட்சம் குடும்பங்களுக்குக் குடிநீர் வசதி ஏற்படுத்தித் தரப் பட்டுள்ளது. ■

### சாம்பரனில் எல்.பி.ஜி. பாட்டிலிங் வசதி

ரூ.136.4 கோடி செலவில் உருவாக்கப் பட்டுள்ள எல்.பி.ஜி. பாட்டிலிங் தொழிற்சாலையல் ஆண்டுக்கு 84.50 லட்சம் சிலிண்டர்களில் எல்.பி.ஜி. நிரப்ப முடியும். கிழக்கு சாம்பரன், மேற்கு சாம்பரன், முசாபர்புர், சிவான், கோபால்கஞ்ச் மற்றும் சீதாமாஹ்ரி தவிர உத்தரப்பிரதேசத்தில் குஷிநகர் மாவட்டமும் இதனால் பயன்பெறும்.

### கோசி பாலம் பணி நிறைவு

1.9 கிலோ மீட்டர் நீளம் கொண்ட இந்தப் பாலம் ரூ.516 கோடி மதிப்பில் கொரோனா நோய்த் தொற்று காலத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

### கழிவுநீக்கம் & நதிகள் பகுதி வளர்ச்சி

பாட்னா நகரில் பெயூர் மற்றும் கரமலிசாக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தவிர, அம்ருட் திட்டத்தின் கீழ் சிவான் மற்றும் சாப்ரா மாவட்டங்களில் தண்ணீர் தொடர்பான திட்டங்களை பிரதமர் தொடங்கி வைத்தார். முங்கேர் மற்றும் ஜமால்புர் பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறையைத் தீர்ப்பது மற்றும் நமாமி கங்கை திட்டத்தின் கீழ் முசாபர்புர் மாவட்டத்தில் மற்றும் நதிப் பகுதி வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டினார்.

### நதிகள் பகுதி வளர்ச்சித் திட்டம்

நமாமி கங்கை திட்டத்தின் கீழ், முசாபர்புர் நகரில் மூன்று பெரும் பாதைகள் உருவாக்கப்படும். கழிப்பறைகள், தகவல் பரிமாற்ற மையங்கள், உடை மாற்றும் அறைகள், நடைபாதைகள், கண்காணிப்புக் கோபுரங்கள், கைகாட்டி வசதிகள், பாதுகாப்பு மற்றும் நல்ல விளக்கு வசதிகள் உருவாக்கப்படும்.

### 3 மாதங்களில் முங்கேர்-பாகல்பூர் தேசிய நெடுஞ்சாலை

பிகாரில் முங்கேர் - பாகல்பூர் தேசிய நெடுஞ்சாலை 80ல், முங்கேர் - பாகல்பூர் - திர்படி-கஹல்கான் வரை 120 கிலோ மீட்டர் தொலைவுக்கு கான்கிரீட் சாலை அமைக்கும் திட்டத்துக்கு மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்கரி ஒப்புதல் அளித்துள்ளார்.



# தெரு வியாபாரிகளுக்கு உதவிக்கரம்

*கொரோனாவால் பாதிக்கப்பட்ட 10 லட்சத்துக்கும் மேற்பட்ட வியாபாரிகள், தங்களது சிறு-வர்த்தகத்தை மறுஅமைப்பு செய்வதற்கு மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெற உள்ளனர்*

அமைப்புசாராத நகர்ப்புற பொருளாதாரத்தில் தெரு வியாபாரிகள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஆனால், கொரோனா பெருந்தொற்று காரணமாக, அவர்களது வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பொதுமுடக்க காலத்தில் சந்தைகள் மூடப்பட்டதால், வியாபாரிகள் வீடுகளிலேயே இருக்க வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர்; இதன் காரணமாக, தெரு வியாபாரிகளின் வியாபாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. தெரு வியாபாரிகள், தங்களது வியாபாரத்தை தொடர்வதற்கு பணி மூலதனமாக கடன் வழங்க வேண்டியது அவசரத் தேவை என்பதை அரசு உணர்ந்துள்ளது. நெருக்கடியிலிருந்து அவர்களை பாதுகாப்பதற்காக ஜூன் 1, 2020-ல் பிரதமரின் ஸ்வாநிதி திட்டத்தை தொடங்கியது.

மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த தெரு வியாபாரிகளுடன் செப்டம்பர் 9, 2020ல் பிரதமர் நரேந்திர மோடி கலந்துரையாடினார். அப்போது அவர், மிகப்பெரும் நெருக்கடி அல்லது பெருந்தொற்று ஏற்படும்போதெல்லாம், ஏழைகள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர் என்று கூறினார். மேலும் அவர், "ஏழைகளுக்கு வேலைவாய்ப்பு, உணவு ஆகியவற்றில் நெருக்கடி ஏற்படுகிறது. மேலும், தாங்கள் வைத்திருந்த சேமிப்புகளை இழக்கிறார்கள்," என்று கூறினார். இந்த பெருந்தொற்று காலத்தில் தெரு வியாபாரிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் பிரதமர் தெரிவித்தார். இதுவரை, பிரதமரின் ஸ்வாநிதி திட்டத்தின்கீழ், 11,12,189 விண்ணப்பங்கள்

**கடன் அல்லது செயல் மூலதனம் மூலம் கிடைக்கும் ஒரு முறை நிதி ஆதரவு, சிறு வர்த்தகங்களை மேம்படுத்த உதவும். ஏற்கனவே, கடன்கள் மூலம் 1.04 லட்சம் தெரு வியாபாரிகளுக்கு பயன் கிடைத்துள்ளது.**



மக்களுக்கு எளிதாக மூலதனம் கிடைக்கச் செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கம். இது, அவர்களுக்கு புதிய தொடக்கமாக இருக்கும். மற்றும் அவர்களது பணியை மீண்டும் தொடங்க முடியும். சுயநிதி முதல் சுயவேலைவாய்ப்பு வரை, சுயவேலைவாய்ப்பு முதல் சுயஆதாரம் வரை மற்றும் சுயஆதாரம் முதல் சுயமரியாதை வரையான பயணத்துக்கான முக்கிய மைல்கல்லாக ஸ்வாநிதி திட்டம் திகழ்கிறது

**பிரதமர் நரேந்திர மோடி**

பெறப்பட்டு, 3,95,120 பேருக்கு கடன் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில், 1,04,062 பேருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. ■

பயனாளிகளுடன் பிரதமரின் கலந்துரையாடலைப் பார்க்க இந்த கியூஆர் குறியீடை ஸ்கேன் செய்யவும்




## சிறப்பு நுண் கடன் திட்டம்

- இந்தத் திட்டத்துக்கான நிதியை மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் முழுமையாக வழங்குகிறது
- இது ஓராண்டுக்கு ரூ.10,000 வரை செயல் மூலதன கடன் வழங்க வழிவகை செய்கிறது
- குறிப்பிட்ட தேதிக்கு முன்னதாகவே திரும்ப செலுத்தும்போது, முன்கூட்டியே செலுத்துவதற்கான அபராதம் எதுவும் விதிக்கப்பட மாட்டாது
- இந்தத் திட்டம் மார்ச் 2022 வரை அமல்படுத்தப்படும்
- உரிய காலத்தில்/முன்கூட்டியே திரும்ப செலுத்துவோருக்கு வட்டி மானியமாக 7 சதவீதம் வழங்கப்படும்
- டிஜிட்டல் பரிவர்த்தனைக்கு மாதாந்திர அடிப்படையில் பணத்தை திரும்பப் பெறும் வகையிலான ஊக்கத் தொகை திட்டம்
- முதல் முறையாக பெறப்படும் கடனை உரிய காலத்தில் திரும்ப செலுத்துவோருக்கு கடன் தகுதி வரம்பு அதிகரிக்கப்படும்

## இந்தப் பலன்களை எவ்வாறு பெற முடியும்?

- நகர்ப்புற பகுதிகளில் வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் அனைத்து தெரு வியாபாரிகளுக்கும் கிடைக்கும்
- கடன் வழங்குவதற்காக எந்தவொரு அடமானத்தையும் கடன் வழங்கும் நிறுவனங்கள் கேட்காது
- கடன் வழங்கும் அமைப்புகளாக, பட்டியலிடப்பட்ட வர்த்தக வங்கிகள், மண்டல கிராமப்புற வங்கிகள், சிறு நிதி வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், வங்கியல்லாத நிதி நிறுவனங்கள், நுண் நிதி நிறுவனங்கள் மற்றும் சுயஉதவிக் குழு வங்கிகள் ஆகியவை செயல்படும்
- வியாபாரம் செய்வதற்கான சான்றிதழ், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்/ நகர வியாபார குழுக்களிடமிருந்து பரிந்துரைக் கடிதம், வியாபாரம் செய்வதற்காக ஏற்கனவே பெற்ற கடனுக்கான ஆவணங்கள், தெரு வியாபாரிகளுக்கான ஏதாவது சங்கத்தில் உறுப்பினராக இருப்பதற்கான விவரங்கள் அல்லது விண்ணப்பிக்கும் நபர் வியாபாரி என்பதை உறுதிப்படுத்துவதற்கான வேறு ஏதாவது ஆவணம் தேவைப்படும்.

# எதிர்காலத்துக்காக குடிமைப் பணியாளர்கள்




ஆளுமையில் எதிர்கால சவால்களை எதிர்கொள்ள அதிகாரிகளை தயார்படுத்துதல் மற்றும் திறனை வளர்ப்பதே நோக்கம். திறன் மற்றும் ஆர்வத்துடன் வீடுகளுக்கே சென்று சேவையாற்றுவதில் மிஷன் கர்மயோகி கவனம் செலுத்துகிறது.

**ஒரே நாடு, ஒரே ரேஷன் அட்டை மற்றும் தேசிய பணியாளர் தேர்வு முகமை ஆகியவற்றுக்குப் பிறகு, மிஷன் கர்மயோகி திட்டத்தை மத்திய அரசு கொண்டுவந்ததன் மூலம், உயர்அதிகாரிகளுக்கான முக்கியத்துவமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது சிறப்பான முறையில் பொது சேவையை வழங்குவதற்காக தனிநபர்கள் அடிப்படையிலும், அமைப்பு நிர்வாக அடிப்படையிலும் திறனை வளர்ப்பதற்கான ஒருங்கிணைந்த சீர்திருத்தமாக அமைந்துள்ளது. சாதாரண மக்களுக்கு எளிதான வாழ்க்கையை உறுதிப்படுத்துவதையும், புதிய இந்தியாவுக்காக புதிய எதிர்கால குடிமை சேவைகளை தயார்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டது இந்த இயக்கம்.**

**குடிமைப்பணி அதிகாரிகள் மத்தியில் புதிய சிந்தனைகள், பயனுள்ள செயல்பாடுகள், ஊகிக்கும் திறன், புத்தாக்கம், தீவிரமாக செயல்படுவது, தொழில் திறன், முன்னேற்றம், ஆர்வத்துடன் செயல்படுவது, வெளிப்படையான மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் திறன் ஆகியவற்றை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு கர்மயோகி இயக்கம் செயல்படுத்தப்படுகிறது. இதுதொடர்பாக டுவிட்டரில் பதிவிட்ட பிரதமர் நரேந்திர மோடி, அரசில் மனிதவள மேலாண்மை**





உயர்தர நேர்மையுடன் செயல்படாவிட்டால், எந்த சேவையின் பெயரும் நிலைத்து நிற்காது

**சர்தார் வல்லபாய் படேல், முன்னாள் உள்துறை அமைச்சர்**

நடைமுறைகளில் கர்மயோகி இயக்கம் மிகப்பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்று தெரிவித்துள்ளார்.

### மாற்றத்துக்கான நேரம்

ஏப்ரல் 21, 1947-ல் இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் படேல், பயிற்சி ஐஏஎஸ் அதிகாரிகள் மத்தியில் உரையாற்றினார். அப்போது அவர், குடிமைப் பணிகளில் மாற்றத்திற்கான நேரம் ஏற்பட்டிருப்பதாக கூறினார்: "நிர்வாகத்தில் ஊழல் இல்லாமலும், ஒருதலைபட்சம் காட்டாமலும் செயல்பட வேண்டும் என்று உங்களுக்கு நான் அறிவுரை கூறுகிறேன். குடிமைப்பணி அதிகாரி, அரசியலில் ஈடுபடாமலும், அடிபணியாமலும் இருக்க வேண்டும். மத சண்டைகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளக் கூடாது. நேர்மையிலிருந்து விலகி செயல்பட்டால், பொது சேவையின் மதிப்பையும், அதன் கவுரவத்தையும் குறைத்துவிடும். அதேபோல, உயர்தர நேர்மையுடன் செயல்படாவிட்டால், எந்த சேவையின் பெயரும் நிலைத்து இருக்காது," என்று வல்லபாய் படேல் கூறினார்.

### திறன் வளர்ப்பு திட்டம்

இதேபோன்ற சிந்தனையுடன், பிரதமர்



## திறன் வளர்ப்பு ஆணையத்தின் பணிகள்

- வருடாந்திர திறன் வளர்ப்புத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பதில் பிரதமரின் பொது மனிதவள கவுன்சிலுக்கு உதவுவது
- குடிமைப் பணி சேவைகள் திறன் வளர்ப்புடன் தொடர்புடைய அனைத்து மத்திய பயிற்சி நிறுவனங்களின் செயல்பாடுகளை மேற்பார்வையிடுதல்
- உள்முக மற்றும் வெளிமுக பயிற்றுநர்கள் மற்றும் பயிற்சி மையங்கள் உள்ளிட்ட ஒரே மாதிரியான கற்பித்தலுக்கான வளங்களை ஏற்படுத்துதல்
- திறன் வளர்ப்புத் திட்டங்களை செயல்படுத்தபடுவதை மேற்பார்வையிடுதல் மற்றும் ஒருங்கிணைத்தல்
- பயிற்சி மற்றும் திறன் வளர்ப்புக்கான பரிந்துரைகளை அளித்தல்
- பொது நடுத்தர நிலை பயிற்சித் திட்டங்களுக்கான விதிகளை வகுத்தல்
- மனிதவள மேலாண்மைத் துறையில் தேவைப்படும் கொள்கை மாற்றங்களுக்கு பரிந்துரை செய்தல்

### நிதி தேவைகள்

- தேசிய குடிமைப் பணிகள் சேவை திறன் மேம்பாட்டு திட்டத்துக்கான சிறப்பு செயல் வழிமுறை உருவாக்கப்படும். இது ஒருங்கிணைந்த அரசு ஆன்லைன் பயிற்சி - கர்மயோகி தளத்தை கையாளும்.
- சுமார் 46 லட்சம் அரசு ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில், 2020-21 முதல் 2024-25 வரையான 5 ஆண்டுகளுக்கு ஒட்டுமொத்தமாக ரூ.510.86 கோடி செலவிடப்படும்.
- அரசின் சார்பில் அனைத்து அறிவுசார் சொத்துரிமையையும் சிறப்பு செயல் வழிமுறை வைத்திருக்கும்.
- ஒருங்கிணைந்த அரசு ஆன்லைன் பயிற்சி - கர்மயோகி தளத்தை பயன்படுத்தும் அனைவரின் செயல்பாடுகளையும் மதிப்பிடுவதற்காக உரிய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு வழிமுறையும் உருவாக்கப்படும்

தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், நிர்வாக ரீதியான கட்டமைப்புடன், குடிமைப் பணி சேவைகள் திறன் மேம்பாட்டுக்கான தேசிய திட்டத்தை தொடங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

குடிமைப்பணி அதிகாரிகளின் திறனை வளர்ப்பதற்கான அடிப்படையை ஏற்படுத்தும் வகையில், மிகவும் கவனத்துடன் குடிமைப் பணி சேவைகள் திறன் மேம்பாட்டுக்கான தேசிய திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், இந்திய கலாச்சாரம் மற்றும் உணர்திறனுடனும், தங்களது வேருடன் இணைந்தும் செயல்படுவார்கள். ஒருங்கிணைந்த அரசு ஆன்லைன் பயிற்சியான கர்மயோகி தளத்தை அமைத்து இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். இதுகுறித்து கருத்து தெரிவித்த மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர், “அரசில் மிகப்பெரும் மனிதவள மேம்பாட்டு சீர்திருத்தமாக இது அமைந்துள்ளது,” என்றார்.

கர்மயோகி தளத்துக்கு ஆதரவு அளிக்கும் வகையில், அதிநவீன கட்டமைப்பை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம், 2 கோடிக்கும் மேற்பட்ட அதிகாரிகளின் திறன் மேம்படுத்தப்படும். இந்த தளம், துடிப்பான ஒன்றாகவும், உள்ளடக்கத்தில் உலகத்தரம் வாய்ந்ததாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக மிகவும் கவனத்துடன் தயாரிக்கப்படும் டிஜிட்டல் மின்னணு கற்றல் ஆவணங்கள் கிடைக்கச் செய்யப்படும்.

## “ஆரம்ப்” திட்டத்துடன் தகவல் தொழில்நுட்பம் தொடக்கம்

பிரதமர் மற்றும் அரசின் முன்னுரிமைகளில் ஒன்றாக மனித வள மேலாண்மை திகழ்கிறது. இதுகுறித்து கருத்து தெரிவித்த மத்திய பணியாளர், பொதுமக்கள் குறைகேட்பு மற்றும் ஓய்வூதியத் துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங், “இந்த சீர்திருத்தங்களுக்கு முசோரியில் உள்ள குடிமைப் பணிகள் அகாடமிக்கு 2017-ல் பிரதமர் பயணம் மேற்கொண்டபோது அடித்தளம் இடப்பட்டது,” என்றார். பயிற்சியாளர்கள் மற்றும் பயிற்றுநர்களுடன் நடத்தப்பட்ட பல சுற்று ஆலோசனைகளுக்குப் பிறகு, மாதிரி திட்டமான “ஆரம்ப்” திட்டத்துக்கு அடித்தளம் அமைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்படி, இந்திய கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்துக்கு இணங்கவும், தற்போதைய தேவைக்கு ஏற்பவும், தற்போதுள்ள பயிற்சி முறையில் மாற்றங்களைக் கொண்டுவர முடிவுசெய்யப்பட்டது. ■



## உங்களது காக்கி சீருடைக்கான மரியாதையை எப்போதுமே இழக்காதீர்கள்: பிரதமர்

பயிற்சி ஐபிஎஸ் அதிகாரிகளுடன் காணொலிக்காட்சி மூலம் கலந்துரையாடிய பிரதமர் நரேந்திர மோடி, தங்களது காக்கி சீருடைக்கான மரியாதையை எப்போதுமே இழக்காதீர்கள் என்று கேட்டுக் கொண்டார்.

சர்தார் வல்லபாய் படேல் தேசிய காவல் அகாடமியில் செப்டம்பர் 4, 2020-ல் நடைபெற்ற பயிற்சி நிறைவு அணிவகுப்பு நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர், தங்களது சீருடையிலிருந்து சக்தியை பெறுவதற்குப் பதிலாக, அதனால் பெருமைகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அப்போது அவர், “உங்களது காக்கி சீருடைக்கான மரியாதையை எப்போதுமே இழக்காதீர்கள். காவல் துறையினரின் சிறப்பான பணிகள், குறிப்பாக கொரோனா பெருந்தொற்று காலத்தில் அவர்களின் செயல்களுக்காக பொதுமக்களின் மனதில் காக்கி சீருடையின் மனிதமுகம் வடிக்கப்பட்டுள்ளது,” என்றார்.

பிரதமர் பேசும்போது, “இதுவரை பாதுகாக்கப்பட்ட சூழலில் நீங்கள் பயிற்சியாளராக இருந்தீர்கள். ஆனால், இந்த பயிற்சி மையத்திலிருந்து வெளியேறியதும், ஒரே இரவில் நிலைமை மாறிவிடும். உங்கள் மீதான நிலைப்பாடு மாறிவிடும். தங்களைப் பற்றி முதல்முறை ஏற்படும் எண்ணமே, கடைசி எண்ணமாக இருக்கும் என்பதை மனதில் கொள்ளுங்கள். நீங்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்டு எங்கு சென்றாலும், அதே பெயர்தான் தொடர்ந்துவரும்,” என்று கூறினார்.

டுவிட்டரில் பதிவிட்ட மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, “நாட்டின் பாதுகாப்பு மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதோடு, அர்ப்பணிப்புடன் நாட்டுக்கு சேவையாற்றட்டும். சேவை மீதான அவர்களது அர்ப்பணிப்பு, இந்திய காவல் பணியில் சேர நமது இளைஞர்களை ஊக்குவிக்கும் என்று நான் நம்புகிறேன்,” என்று தெரிவித்துள்ளார்.

பயிற்சி ஐபிஎஸ் அதிகாரிகளுடன் பிரதமரின் கலந்துரையாடலைக் காண கியூஆர் குறியீடை ஸ்கேன் செய்யவும்

# ஹைச் எஸ் டி டி வி யை வெற்றிகரமாக அறிமுகம் செய்த நான்காவது நாடு இந்தியா

*ஹைபர்சானிக் குரூஸ் வெஹிகில் அறிமுகப்படுத்தப்பட்டதையடுத்து இந்தியா பாதுகாப்பு துறையில் மிகப் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது*

இந்தியா ஹைபர்சானிக் க்ரூஸ் வெஹிகிளை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியுள்ளது. ஹைபர்சானிக் தொழில்நுட்ப தெமன்ஸ்ட்ரேஷன் வெஹிகிள் ஹைச் எஸ் டி டி வி பரிசோதனை மூலம் ஹைபர்சானிக் ஏர் ப்ரீதிங் ஸ்க்ராம்ஜெட் தொழில்நுட்பத்தில் நாட்டின் வல்லமை நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஹைபர்சானிக் கம்பஸ்சன் தொடர்ந்து நீடித்து குரூஸ் வெஹிகிள் விரும்பிய பாதையில் ஒலியின் வேகத்தைவிட ஆறு மடங்கு அதிகமான நேர்கோட்டு வேகத்தில் தொடர்ந்து பயணித்தது அதாவது ஏறத்தாழ வினாடிக்கு 02 கிலோமீட்டர்.

பாதுகாப்பு ஆய்வு மற்றும் வளர்ச்சி அமைப்பு ( டி ஆர் டி ஓ) ஹைச் எஸ் டி டி வி பரிசோதனையை 7 செப்டம்பர் 2020 அன்று ஒடிசா கடலோரப் பகுதிக்கு அப்பாலுள்ள வீலர் தீவில் உள்ள டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் ஏவுகணை செலுத்தும் வளாகத்தில் இருந்து செலுத்தப்பட்டது. பல தடங்களைக் கண்காணிக்கும் ரேடார்கள், எலக்ட்ரோ ஆப்டிகல் அமைப்புகள், டெலிமெட்ரி நிலையங்கள் மூலமாக குரூஸ் வெஹிகிள், அதைச் செலுத்துவதற்கான அம்சங்கள், ஸ்கிராம் ஜெட் எஞ்சின் ஆகிய அனைத்து அம்சங்களும் கண்காணிக்கப்பட்டன.

ஏற்கனவே நன்கு பரிசோதிக்கப்பட்டு நிரூபிக்கப்பட்ட திடமான ராக்கெட் மூலமாக செலுத்தப்பட்ட இது, 30 கிலோமீட்டர் ஆல்டிட்யூட் அளவிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கிருந்து ஹைபர்சானிக் மாச் நம்பரில் ஏரோ டைனமிக் வெப்ப கேடயங்கள் பிரிக்கப்பட்டன. செலுத்தும் வெஹிகிளிலிருந்து குரூஸ் வெஹிகிள் தனியே பிரிந்து அதற்கு அடுத்த கட்ட பயணம் திட்டமிட்டபடி தொடர்ந்தது. ஹைபர்சானிக் கம்பச்ஷன் தொடர்ந்து நீடித்தது. குரூஸ் வெஹிகிள் விருப்பப்பட்ட பாதையில் ஒலியின் வேகத்துக்கு ஆறு மடங்கு வேகத்துடன் பயணித்தது. ■




"உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஸ்கிராம் ஜெட் புரொபல்ஷன் அமைப்பைப் பயன்படுத்தி ஹைபர்சானிக் தொழில்நுட்ப டெமான்ஸ்ட்ரேஷன் வகைகள் டிஆர்டிஓவால் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது. இந்தியாவை சுயசார்பு இந்தியாவாக உருவாக்க வேண்டும் என்ற பிரதமர் நரேந்திர மோடியின் கனவை நனவாக்கும் வகையிலான இந்த குறிப்பிடத்தக்க சாதனைக்காக, டிஆர்டிஓ வுக்கு என்னுடைய வாழ்த்துக்கள்"

**பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்**

## ஹைபர்சானிக் தொழில்நுட்பம் என்றால் என்ன?

ராக்கெட்டுகளும் ஏவுகணைகளும் ஹைபர்சானிக் வேகத்தில் பயணம் செய்ய உதவும் தொழில்நுட்பம் ஹைபர்சானிக் தொழில்நுட்பம் எனப்படுகிறது. ஒலியின் வேகத்தை விட ஐந்து மடங்கு (mach5) அதிக வேகம் கொண்டது, ஹைபர்சானிக் என்று குறிக்கப்படும்.

ஹைபர்சானிக் வேகம் என்பது ஸ்டீராய்டுகள் மீது சூப்பர்சானிக் என்றும் அழைக்கப்படும். இது அதிவிரைவில் அதிவிரைவான வேகம் என்று கருதப்படுகிறது. சூப்பர்சானிக் பயணம் என்பது ஒலியின் வேகத்தை விட அதிகமான வேகத்தில் பயணம் செய்வதாகவும் (மாச்1). டிஆர்டிஓ வால் செலுத்தப்பட்ட ஹைபர்சானிக் வெஹிகிளின் வேகம் மாச் 6.

### இந்தியாவுக்கு எவ்வாறு நன்மை கிடைக்கும்?

- இந்த தொழில்நுட்பத்தை ராக்கெட்டுகள், ஏவுகணைகள் ஆகியவற்றுக்கு பயன்படுத்த முடியும். இலக்கை, குறைவான காலத்திலேயே தாக்க இந்த தொழில்நுட்பம் உதவும்.
- எரிபொருளை சேமிக்க குறிப்பாக, ராக்கெட் வளிமண்டலத்தில் இருக்கும் வரை எரிபொருளை சேமிக்க இது உதவும். இதனால் வெஹிகிள் லேசாக இருக்கும்

# தூய்மை இந்தியா என்ற கனவை நனவாக்குவோம்

**10 கோடிக்கும் அதிகமான கழிப்பறைகள் மூலமாக திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லாத கிராமங்கள் ஓ டி எ.ஃப் கிராமங்கள் 100 சதவிகிதம் கொண்ட நாடாக இந்தியா உருவாகியுள்ளது. குப்பைகள் இல்லாத இந்தியா என்ற சவாலை சமாளிக்கவும் இந்தியா தயார்.**




அனைத்து இடங்களிலும் தூய்மை நிலவச் செய்ய வேண்டும் என்பதற்கான முயற்சிகளை விரிவுபடுத்துவதற்காக கழிவுகள் அகற்றும் பணியில் அதிக கவனம் செலுத்துவதற்காக சுவச் பாரத் மிஷன் தூய்மை இந்தியா இயக்கத்தை 2 அக்டோபர் 2014 அன்று பிரதமர் நரேந்திர மோடி துவக்கி வைத்தார். தேசிய அளவிலான இயக்கமாக இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2019ஆம் ஆண்டுக்குள், இந்தியாவில் உள்ள கிராமப்புறப் பகுதிகளை திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத பகுதிகளாக மாற்றுவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டிருந்தது. பெரும் அளவிலான மனித நடவடிக்கையிலான மாற்றம், தனிப்பட்ட வீடுகளில் கழிப்பறைகள், சமூகத்தினருக்கான கழிப்பறைகள் ஆகியவற்றைக் கட்டுதல், கழிப்பறைகள் கட்டுவதை, பயன்படுத்துவதைக் கண்காணிக்க தேவையான அமைப்புகளை ஏற்படுத்துதல் போன்றவை மூலமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் பெரும் வெற்றி பெற்றது. நாட்டில் எங்குமே திறந்த வெளி கழிப்பிடங்கள் இல்லை என்ற நாடாக 2 அக்டோபர் 2019 இல் இந்தியா அறிவிக்கப்பட்டது. கிராமப்புற இந்தியாவில் 100 மில்லியனுக்கும் அதிகமான கழிப்பறைகள் கட்டப்பட்டன.

தனிப்பட்ட வீடுகள் அல்லது நகர்ப்புறங்களில் பொது இடங்களில் கழிப்பறைகள் அமைப்பது இலக்குக்கும் அதிகமாக நடைபெற்று திட்டம் இலக்கை விட அதிகமாக வெற்றி அடைந்துள்ளது. தனிப்பட்ட வீடுகளில் கழிப்பறைகள் அமைப்பது நூற்றி ஐந்து சதவீத வெற்றியைப் பெற்றுள்ளது. சமூக மற்றும் பொது கழிப்பறைகள் அமைப்பது 117 சதவிகித வெற்றியை பெற்றுள்ளது.

கிராமங்களில் வீடுகளில் கழிப்பறை கட்டி இந்தியாவை திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லாத கிராமங்கள் கொண்ட நாடு என்றும், குப்பைகள் இல்லாத இந்தியா என்றும் 2 அக்டோபர் 2019 அன்று மகாத்மா காந்தியின் 150வது பிறந்த ஆண்டு விழாவைக் கொண்டாடும் போது உருவாக்க வேண்டும் என்று ஒட்டுமொத்த தேசத்தையும் 15 ஆகஸ்ட் 2014 அன்று பிரதமர் கேட்டுக்கொண்டார்.

பிரதமரின் இந்த உறுதிப்பாடு நாடுமுழுவதும் மக்கள் இயக்கமாகவே மாறி விட்டது. தற்போது, இந்தியாவில்

உள்ள அனைத்து கிராமங்களும், திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லாத கிராமங்களாக அறிவிக்கப்பட்டதையடுத்து, அரசு கிராமங்களை அடுத்த கட்டத்திற்கு ஓ டி எஃப்+ என்பதற்கு எடுத்துச் செல்ல உள்ளது. கிராமங்களிலும் நகரங்களிலும் நன்கு பராமரிக்கப்படும் தனிப்பட்ட மற்றும் பொது கழிப்பறைகளை, தூய்மையான கழிப்பறைகள் என்ற பிரிவுக்கு எடுத்துச் செல்வதே இதன் நோக்கமாகும். இவைதவிர ரயில்வே பாதைகளையும் சுத்தமாக வைத்திருப்பதற்காக ரயில்களில் பயோ கழிப்பறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த இயக்கம் குறித்து மக்களுக்கு ஊக்கமளிப்பதற்காக பிரதமர் தமது உரையில் எப்போதும் தாமாகவே முன்வந்து தூய்மை இந்தியா இயக்கம் குறித்து தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் உரையாற்றி வருகிறார். விடுதலை நாள் விழா கொண்டாட்டங்களுக்காக செங்கோட்டையின் மதில்களில் இருந்து உரையாற்றினாலும் , அமெரிக்காவில் நடைபெற்ற ஹவுடி மோடி நிகழ்ச்சியாக இருந்தாலும் பிரதமர் எப்போதும் தூய்மை இந்தியா இயக்கம்குறித்து குறிப்பிட்டிருக்கிறார். எவ்வாறு நாட்டு மக்கள் இந்தத் திட்டத்தை பெரும் வெற்றி பெற பங்காற்றி இருக்கிறார்கள் என்பது குறித்தும் கூறியிருக்கிறார்.

நம் நாட்டு குடிமக்கள் தூய்மை இந்தியா இயக்கத்தில் ஈடுபட வேண்டும் என்பதற்காக, உதாரணமாகத் திகழ வேண்டும் என்பதில் பிரதமர் எப்போதும் நம்பிக்கை கொண்டிருந்தார். 2 அக்டோபர் 2014 அன்று புதுதில்லியில் வால்மீகி சதனில் ஒரு துடைப்பத்தை கையிலெடுத்துக் கொண்டு தெருவை சுத்தப்படுத்தி, இந்த இயக்கத்தைத் தொடங்கி வைத்தார். இந்த இயக்கத்தில், மக்களும் பிரபலமானவர்களும் பங்கேற்றுக்கொண்டதையடுத்து இது மக்கள் இயக்கமாக மாறியது.

## வெளிநாடுகளிலும் தூய்மை இந்தியா பற்றி உரை

22 செப்டம்பர் 2019 அன்று அமெரிக்காவில் ஹவுடி மோடி நிகழ்ச்சி நடைபெற்றது. அந்நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர் கடந்த 70 ஆண்டு காலத்தில் நாட்டின் கிராமப்புறத் தூய்மை வெறும் 38.70 சதவிகிதமாக இருந்தது என்றார். தற்போதைய அரசு, ஐந்தாண்டு காலங்களில் 11 கோடிக்கும் அதிகமான கழிப்பறைகளைக் கட்டியுள்ளது. கிராமப்புறத் தூய்மை 99 சதவீதத்தை அடைந்துள்ளது





"தூய்மை இந்தியா இயக்கம் வெற்றி அடைந்தது என்னால் அல்ல. இந்த வெற்றியை நான் எனக்கு உரித்தாக்கிக் கொள்ள மாட்டேன். இந்த வெற்றி மக்களுடைய வெற்றி. நூறு மகாத்மா காந்திகள் அல்லது ஆயிரம் நரேந்திரமோடிகள் இணைந்து வந்தாலும் தூய்மை இந்தியா என்ற கனவு நனவாக முடியாது. ஆனால் 125 கோடி இந்தியர்களும் ஒன்றிணைந்தால் இந்தக் கனவை எளிதில் நனவாக்க முடியும்"

**பிரதமர் நரேந்திர மோடி**

## விவரங்கள் வெளிப்படுத்தும் உண்மை

| | ● வீடுகளில் கழிப்பறைகள் | | ● பொது கழிப்பறைகள் | |
|---|---|---|---|---|
| இலக்கு | 58,99,637 | இலக்கு | 5,07,589 |
| கட்டப்பட்டவை | 62,16,114 | கட்டப்பட்டவை | 5,94,658 |
| | இலக்கில் 105 சதவிகிதம் | | இலக்கில் 117 சதவிகிதம் | |

- 290 நகரங்களுக்கும் அதிகமான இடங்களில் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கழிப்பறை கட்டிடங்கள் கூகுள் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் என் ஹெச் ஏ ஐ இல் உள்ள 500 கழிப்பறை கட்டடங்களும் அடங்கும்.
- அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட ஸ்வச்சதா செயலி, 1.55 கோடிக்கும் அதிகமான குடிமக்களால் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது

### தூய்மை இந்தியா இயக்கம் (கிராமப்புறம்)

- 2 அக்டோபர் 2014க்கு பிறகு 10,65,56,165 தனிப்பட்ட வீடுகளில் கட்டப்பட்ட கழிப்பறைகள்
- 603177 திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லாத கிராமங்கள்
- 262736 திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லாத கிராம பஞ்சாயத்துகள்
- 706 திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லாத மாவட்டங்கள்
- 36 ஓ டி எஃப் மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்கள்

**தனிப்பட்ட வீடுகளில் எவ்வாறு கழிப்பறைகள் அதிகரித்தன ஐ ஹெச் ஹெச் எல் சதவிகிதத்தில்**

| | |
|---|---|
| October 2, 2014 | 38.7 |
| 2015-2016 | 50.85 |
| 2016-2017 | 64.92 |
| 2017-2018 | 84.19 |
| 2018-2019 | 98.28 |
| 2019-2020 | 100 |
| 2020-2021 | 100 |

### தூய்மை இந்தியா (நகர்ப்புறம்)

**திறந்தவெளி காலைக்கடன் பழக்கமற்ற (நகரம்)**

| | |
|---|---|
| மொத்த நகரங்கள் 43 722 | ஓ டி எ∴ப் ++ சான்றளிக்கப்பட்டவை 489 11% |
| ஓ டி எ∴ப்+ சான்றளிக்கப்பட்டவை 16 32 [ 37%] ஓடிஎ∴ப் என அறிவிக்கப்பட்டவை 4 323 [99%] | |
| சான்றளிக்கப்பட்ட நகரங்கள் 4204 [96%] | |

**குப்பைகளற்ற நகரங்கள் ஐந்து நட்சத்திர தரத்தில்**

| மாநிலம் | மாவட்டம் | நகரம் |
|---|---|---|
| சட்டிஸ்கர் | சர்குஜா | அம்பிகாபூர் |
| குஜராத் | ராஜ்கோட் | ராஜ்கோட் |
| குஜராத் | சூரத் | சூரத் |
| கர்நாடகா | மைசூர் | மைசூர் |
| மத்தியப் பிரதேசம் | இந்தூர் | இந்தூர் |
| மகாராஷ்ட்ரா | தானே | நவிமும்பை |

# தூய்மை இந்தியா இயக்கம் குறித்து பிரதமர் உரையாற்றுகிறார்

**கடந்த ஆறு ஆண்டுகளாக தூய்மை இந்தியா இயக்கம் குறித்து பிரதமர் செங்கோட்டையிலிருந்து அந்த இயக்கம் குறித்த தகவல்களைப் பகிர்ந்து கொண்டிருக்கிறார் என்பதிலிருந்தே பிரதமர் நரேந்திர மோடியும், அவரது அரசும் இத்திட்டத்திற்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் அளிக்கின்றன என்பதை அறிந்து கொள்ளலாம். அவரது உரைகளில் இருந்து சில துளிகள்**

## 2020

காந்தியடிகளின் 150-வது பிறந்த ஆண்டு கொண்டாட்டங்களின் போது இந்தியா திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லாத கிராமங்கள் கொண்ட நாடாக விடுதலை பெற்றது

## 2019

2019 ஆம் ஆண்டில் அடுத்த சில வாரங்களுக்குள் இந்தியா திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லாத நாடாக அறிவித்துக் கொள்ளும் நிலை வரும் என்று நான் நம்புகிறேன். மாநிலங்கள் கிராமங்கள் முனிசிபாலிட்டி ஊடகங்கள் என ஒவ்வொருவரும் திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லாத நிலை ஏற்பட வேண்டும் என்பதற்கான மக்கள் இயக்கத்தைத் தொடங்கி இருக்கிறார்கள்.

## 2018

2014 ஆம் ஆண்டில் செங்கோட்டையில் மதில்களிலிருந்து நான் தூய்மை குறித்து பேசிய போது சிலர் அதுகுறித்து எள்ளி நகையாடினார்கள். பாபு தனது வாழ்நாள் முழுவதும் விடுதலைக்கு அளித்த முக்கியத்துவத்தை விட அதிகமான அளவு முக்கியத்துவத்தை சுத்தத்திற்கு அளித்தார்.

## 2016

கிராமங்களில் பெண்களுக்கு பெருமை சேர்க்கவேண்டும் என்ற இயக்கம், நாட்டில் இப்போது முக்கிய விஷயமாக உள்ளது. திறந்தவெளி கழிப்பிடப் பயன்பாடு முற்றிலுமாக நிறுத்தப்பட வேண்டும்

## 2015

2019 ஆம் ஆண்டில் நாம் மஹாத்மா காந்தியின் 150வது பிறந்த ஆண்டை கொண்டாட இருக்கிறோம். காந்திஜிக்கு அவரது 150-வது பிறந்த ஆண்டு விழாவில் தூய்மையான இந்தியாவை அளித்து புகழஞ்சலி செலுத்த வேண்டும்.

## 2014

நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளிலும், பெண் குழந்தைகளுக்கு என்று தனியாக கழிப்பறைகள் இருக்க வேண்டும். அப்பொழுது தான் நம்முடைய மகள்கள் பள்ளிப்படிப்பை பாதியிலேயே விட்டு விடவேண்டும் என்ற கட்டாயத்திற்குத் தள்ளப்பட மாட்டார்கள்

## திடக்கழிவு மேலாண்மை

கழிவு உற்பத்தி நாளொன்றுக்கு 142 58 எம்டி

பதப்படுத்துதல் நாளொன்றுக்கு 95 066 எம்டி

வீடு வீடாக சென்று சேகரித்தல் 83213 வார்டுகள்

குப்பை இல்லாத நகரங்கள் நட்சத்திர அந்தஸ்து
ஒரு நட்சத்திரம் 64
மூன்று நட்சத்திரம் 86
ஐந்து நட்சத்திரம் 6

## எஸ் பி எம் பணத்தை சேமிப்பது வாழ்க்கையை பாதுகாக்கிறது வேலை வாய்ப்பை உருவாக்குகிறது

- யுனிசெஃப் அமைப்பின் 2017 அறிக்கையின்படி, கிராமங்களுக்கு ஓ டி எஃப் அந்தஸ்து கிடைத்ததன் காரணமாக, ஒரு குடும்பத்தில் சுகாதாரத்தைக் கடைபிடிப்பதன் மூலம் 50,000 ரூபாய்வரை சேமிக்க முடிந்திருக்கிறது என்று கூறப்பட்டுள்ளது. இத்தொகை பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக செலவிடப்பட்டு வந்தது
- உலக சுகாதார நிறுவனத்தின் 2018 ஆம் ஆண்டு அறிக்கையின் படி, இந்த இயக்கத்தின் காரணமாக மூன்று லட்சம் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன
- யுனிசெஃப் அமைப்பின் 2019ஆம் ஆண்டு அறிக்கையின்படி தூய்மை இந்தியா இயக்கத்தின் மூலமாக 2014 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 2019 பிப்ரவரி மாதம் வரை கிராமப்புற இந்தியாவில் 25.5 லட்சம் முழுநேர வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன

## உலக அளவிலான குளோபல் கோல்கீப்பர் விருது

தூய்மை இந்தியா இயக்கத்தின் வெற்றிக்காக 2019ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பில், மெலிண்டா கேட்ஸ் பவுண்டேஷன் நியூயார்க்கில் உள்ள லிங்கன் சென்டர் ஆஃப் பெர்ஃபார்மிங் ஆர்ட்ஸ் அரங்கில் பிரதமர் நரேந்திர மோடிக்கு குளோபல் கோல்கீப்பர் விருதை வழங்கியது. இந்த இயக்கத்தின் மூலமாக 50 கோடி மக்களுக்கு உடல் நல பாதுகாப்பு கிடைத்ததாக இந்த ஃபவுண்டேஷன் கூறியது ■

# பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துதல்

*கோவிட் 19 பெருந்தொற்றைக் குணப்படுத்துவதற்காக போராடுவதை விட, இந்நோய் வராமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பது சிறந்தது. இந்த நோயிலிருந்து குணமடைபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கும் வகையில், இந்தியா இதை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது.*

கோவிட் 19 பெருந்தொற்று காலத்தில் உலக அளவிலான கைகழுவும் நாள் 15 அக்டோபர் அன்று அனுசரிக்கப்படுவது மிகவும் இன்றியமையாத ஒன்றாகிவிட்டது. கைகளைக் கழுவுதல்; சுத்திகரித்தல் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்துவதோடு, முகக் கவசங்களைப் பயன்படுத்துவது தனிமனித இடைவெளியைக் கடைப்பிடிப்பது ஆகியவற்றைப் பின்பற்றுவதன் மூலம், நாள்தோறும் நோயிலிருந்து குணமடைபவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருவதன் மூலம், நாடு வெற்றிகரமாக கொரோனா பெருந்தொற்றுக்கு எதிராகப் போராடி வருவது புதிய உச்சத்தை அடைந்துள்ளது. இந்தியாவில் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை, தொடர்ந்து அதிகரித்து 17 செப்டம்பர் 2020 அன்று 78.64 சதவிகிதத்தை எட்டியது.

2020 செப்டம்பர் 21 அன்று, முன்னெப்போதும் இல்லாத எழுச்சியாக, இந்தியாவில் ஒரே நாளில் அதிகபட்ச எண்ணிக்கையாக ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் (1,01,468) தொற்றிலிருந்து குணமடைந்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் சேர்த்து, குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 45 லட்சத்தை (44,97,867) நெருங்கியுள்ளது. இதன் விளைவாக, குணமடைதல் விகிதம் 80.86%-ஐ எட்டியுள்ளது. இந்தச் சாதனையால், குணமடைதலில் உலக அளவில் இந்தியா முன்னிலை வகிக்கிறது.

### ஈ- சஞ்சீவனி மூலம் மூன்று லட்சம் தொலைபேசி ஆலோசனைகள்

மத்திய சுகாதார அமைச்சகத்தின் கீழ் ஈ- சஞ்சீவனி தொலைபேசி மருத்துவ சேவை மூலம் மூன்று லட்சம் தொலைபேசி மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. 9 ஆகஸ்ட் 2020 அன்று ஒன்றரை லட்சம் தொலைபேசி மருத்துவ ஆலோசனைகள் ஈ-சஞ்சீவனியின் மூலம் வழங்கப்பட்டிருந்தன. இதுதொடர்பான கூட்டத்திற்கு மத்திய சுகாதார குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷவர்தன் தலைமை வகித்தார். அன்று முதல் ஒரு மாத காலத்திற்குள் தொலைபேசி வாயிலான மருத்துவ ஆலோசனைகள் இரு மடங்கு அதிகரித்துள்ளது. ■



**44 லட்சத்திற்கும் அதிகமான நோயாளிகள் குணமடைந்தனர்**

**இந்தியா கொரோனாவுக்கு எதிராகப் போராடுகிறது**
**22 செப்டம்பர் 2020 அன்று**




**இந்தியாவில் நோயாளிகளின் எண்ணிக்கை**
**56,46,010**

**குணம் அடைவோர் சதவிகிதம் 80.86%**

44,97,867 நோயாளிகள் குணமடைந்துள்ளனர். 100 நோயாளிகளில் 80 நோயாளிகள் குணமடைகிறார்கள். இறப்பு விகிதம் 1.59%

செப்டம்பர் 21, 2020 அன்று, 1,01,468 பேர் குணமடைந்துள்ளனர்

குணமடைந்த நோயாளிகளில் 79 சதவீதம் பேர் மகாராஷ்டிரா, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகா, தமிழ்நாடு, உத்திரப்பிரதேசம், ஒடிசா, கேரளா, மேற்கு வங்கம், பஞ்சாப், தில்லி ஆகிய 10 மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்.

மார்ச் 2020 முதல் தனிப்பட்ட படுக்கைகள் 36.3 மடங்கு அதிகரித்துள்ளன. தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகள் 24.6 சதவீதம் அதிகரித்துள்ளன

231093 படுக்கைகள் பிராணவாயு உதவி கொண்ட படுக்கைகள் மற்றும் 32575 படுக்கைகள், செயற்கை சுவாசக் கருவி வசதி உள்ள படுக்கைகள்

*(இந்த எண்ணிக்கை விவரங்கள் 22 செப்டம்பர் வரையிலானவை ஆதாரம் : சுகாதார அமைச்சகம்)*







# மக்களுக்கு அதிகாரம் வழங்குதல்

*அரசால் தொடங்கப்பட்ட பல்வேறு திட்டங்கள் நாடு முழுவதும் உள்ள மக்களுக்கு பெரும் நன்மை அளித்துள்ளது. இப்போது அவர்கள் இந்தத் திட்டங்களால் கிடைத்த நன்மைகள் குறித்து உரக்கக் கூறுகிறார்கள்*

## முஹம்மது ஷா:ஃபிக்கு பிரதமரின் ஊரக வீட்டு வசதி திட்டத்தின் கீழ் வீடு கிடைத்தது



பிரதமர் ஆவாஸ் யோஜனா கிராமின் பிரதமரின் ஊரக வீட்டு வசதி திட்டம் வீடு வேண்டும் என்ற பலரது கனவை நனவாக்கியுள்ளது. ஜம்மு காஷ்மீரில் உள்ள பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள முஹம்மது ஷா:ஃபி இத்திட்டத்தின் பயனாளிகளில் ஒருவர். “பிரதமரின் ஊரக வீட்டு வசதி திட்டம் போன்ற திட்டங்களுக்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு நான் நன்றி கூறுகிறேன்“ என்கிறார் அவர். பூஞ்ச் மாவட்டத்தில் மான் கோட்டேதேசிலில் ஆறுக்கும் மேற்பட்ட வீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. மற்றொரு பயனாளியான ருக்ஷனா கௌசர் கூறுவதாவது “ நாங்கள் துன்பகரமான வாழ்க்கையை வாழ கட்டாயப்படுத்தப்பட்டிருந்தோம் ஆனால் இப்போது நாங்கள் வசதியாக வாழ்கிறோம்“. பிரதமரின் ஊரக வீட்டு வசதி திட்டத்தின் கீழ் தங்களுக்கென்று ஒரு வீடு வேண்டும் என்ற கனவில் இருந்த பயனாளிகளுக்கு என 2.25 கோடிக்கும் அதிகமான வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

## பெருந்தொற்று காலத்தின்போது அரசு திட்டங்கள் உதவி புரிந்தன

பெருந்தொற்று பற்றி அறியாமல் இருந்த ராஞ்சியைச் சேர்ந்த புஷ்பா சவுத்ரி பொது முடக்கம் அறிவிக்கப்படுவதற்கு முன்னர் தான் ஜன்தன் கணக்கு துவக்கி இருந்தார். அது அவருக்குப் பேருதவியாக அமைந்தது. “மூன்று மாதங்களுக்கு, ஒவ்வொரு மாதமும் 500 ரூபாய் எனக்கு கிடைத்த போது நான் மிகவும் திருப்தி அடைந்தேன்“ என்கிறார் அவர். நாட்டை கொரோனா வைரஸ் தாக்கிய போது ஜெய்ப்பூரை சேர்ந்த மகேந்திரசிங் பிரஜாபதிக்கு பிரதமர் ஸ்வநிதி திட்டத்தின் கீழ் கடன் வசதி கிடைத்தது. கிசான் சம்மான் நிதி மூலமாக உழவர்கள் பயனடைந்தனர். மகாராஷ்டிராவில் அகோலாவைச் சேர்ந்தவரான ஹரிதாஸ் பெகாம் கொரோனா காலத்தின்போது, பூச்சிக்கொல்லி மருந்துகள் வாங்கவும் உரங்கள் வாங்கவும், பிரதமர் கிசான் சம்மான் நிதி மூலம் கிடைத்த பணம் தமக்கு உதவியதாகக் கூறினார். பல்வேறு திட்டங்களின் மூலம் பயன் பெற்ற பயனாளிகள் பிரதமருக்கு தங்கள் நன்றியை தெரிவித்துக் கொண்டுள்ளனர்



## ஐஐடி மும்பையின் புதுமையான மெய்நிகர் பட்டமளிப்பு விழா



பிரதமர் நரேந்திர மோடி ஐஐடி மும்பையின் 2018 பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற போது புதுமைகள் மனிதகுலத் தேவைக்கு பயன்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஐஐடி மும்பை தன் நிறுவனத்தின் மதிப்புக்கேற்ப கொரோனா வைரஸ் பெருந்தொற்று காலத்தின்போது மெய்நிகர் பட்டமளிப்பு விழாவை ஏற்பாடு செய்தது. மேடை மீது அமர்ந்திருந்த முக்கியஸ்தர்கள், விருந்தினர்களின் உரைகள், மாணவர்களுக்கு வழங்கப்படும் பட்டங்கள் ஆகிய அனைத்தும் வழக்கம்போல் நடைபெற்றன. ஒரே ஒரு மாற்றம் என்ன என்றால் அது மெய்நிகர் நிகழ்ச்சியாக நடைபெற்றது என்பது மட்டுமே. . பிளாக் ஸ்டோன் நிறுவனத்தின் ஸ்டீபன் வாட்ச்மேன், நோபல் பரிசு பெற்ற டங்கன் எம் ஹால்டேன் ஆகியோர் மெய்நிகர் விழாவில் பங்கேற்றனர். “ உலகம் முழுவதும் இந்த நிகழ்ச்சியில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும் மாறிவரும் காலத்திற்கு ஏற்ப இந்தியா தன்னை புதுமைகள் துறையில் வலுவாக வெளிப்படுத்தி வருகிறது” என்று அவர்கள் கூறினார்கள் ■



**Narendra Modi** @narendramodi ·

பிரதமர் மத்சய சம்பத யோஜனா திட்டம் மீன்வளத் துறையை மாற்றியமைக்கும். இத்திட்டம் 20 ஆயிரத்து 50 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீட்டைக் கொண்டு வந்துள்ளது. மீன்வளத் துறை வரலாற்றில் இது மிக அதிகமான முதலீடாகும். சுயசார்பு இந்தியாவை உருவாக்குவதற்கான முயற்சிகளுக்கு பி எம் எம் எஸ் வை வலுவூட்டும்



**Rajnath Singh** @rajnathsingh ·

ரஃபேல் போர் விமானங்களை இணைத்துக் கொண்டிருப்பது உலகிற்கு மிக அழுத்தமான செய்தியாகும். குறிப்பாக இந்தியாவின் இறையாண்மைக்கு சவால் விடுபவர்களுக்கு அழுத்தமான செய்தியாகும். தற்போது நிலவும் பாதுகாப்பு நிலைமைகளை அல்லது இந்தியாவின் எல்லைப் பகுதிகளில் உருவாக்கப்பட்டுள்ள சூழல்களைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் இது மிக முக்கியமான நடவடிக்கையாகும்.



**Amit Shah** @AmitShah ·

இந்திய ஆட்சிப் பணிகளில் மாற்றத்தைக் கொண்டுவருவதற்காக மத்திய அமைச்சரவை இன்று மிஷன் கர்மயோகி திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. தொலைநோக்கு பார்வை கொண்ட இந்த சீர்திருத்தத்திற்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த முழுமையான, விரிவான திட்டம் தனியார் திறனை வளர்த்தெடுக்கவும், அமைப்பு ரீதியிலான திறன்களை வளர்த்தெடுக்கவும் கவனம் செலுத்தும்



**Nitin Gadkari** @nitin_gad...

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் தேசிய நெடுஞ்சாலை கட்டுமானப் பணிகளுக்கான இலக்கை விஞ்சியுள்ளது. இந்த ஆண்டு ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையிலான காலத்தில்.



**Narendra Singh Tomar** @nst...

அன்பான விவசாயிகளே, வேளாண் மசோதாக்கள் பற்றி எதிர்கட்சிகள் பரப்பும் பொய்கள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்.

21ஆம் நூற்றாண்டின் இந்திய விவசாயிகள், எந்த கட்டுப்பாடுகளும் இன்றி, சுதந்திரமாகப் பயிரிடலாம் மற்றும் விளைபொருட்களை விற்கலாம்



**Dr Harsh Vardhan** @drharshv...

இந்தியாவில் கோவிட் 19 நோய் தடுப்பு மருந்தைத் தயாரிப்பதற்கான பணிகளை ஊக்குவிக்க அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. 30க்கும் மேற்பட்ட தடுப்பு மருந்துகள், தயாரிப்பின் பல்வேறு கட்டங்களில் உள்ளன. மூன்று மருந்துகள் முன்னேறிய கட்டங்களில் I. II, III பரிசோதனை கட்டங்களில் உள்ளன



# PM: NEP nation's policy, not govt's

Modi says NEP needs to be implemented collectively as it lays emphasis on passion, practicality and performance

Amandeep Shukla
letters@hindustantimes.com

NEW DELHI : The new National Education Policy (NEP) focuses on passion, practicality and performance, and is a major step towards moving away from a "one size fits all" approach, Prime Minister Narendra Modi said on ...

PM Narendra Modi addr...

# PM: E-delivery platform for street vendors in the works

New Delhi: Making a strong pitch for digital transactions, especially in the wake of the Covid-19 pandemic, PM Modi on Wednesday said that the government is working on an online delivery platform for street vendors on the lines of big restaurants and also to enable them in "digital shop-keeping".

During a virtual interaction with street vendors of MP, the PM said beneficiaries of the SVANidhi scheme will be linked based on their eligibility to other schemes like Ujjwala and Ayushman Bharat.

Lauding the scheme, home minister Amit Shah said it is the result of the PM's "far-sighted ...

# Govt urges citizens to come forward for Covid-testing

PNS ■ NEW DELHI

Alarmed at the spike in Covid-19 cases each passing day, the Union Health Ministry on Tuesday exhorted the citizens to come forward to get themselves tested for the infection and warned that their irresponsible behaviour like failure to follow distancing norms and not using masks could lead to a damaging situation as far as the pandemic is concerned in India.

After breaching single-day records of highest Covid cases in the world going past 90,000, India on Tuesday registered ...

... reaction (RT-PCR) tests on symptomatic people who tested negative for the rapid-antigen test (RAT).

Addressing a press briefing, NITI Aayog member V K ...

... said.

At a time when coronavirus cases are on the rise, Paul said there have been repeated complaints from states about people becoming lax in taking safety precautions.

Union Health Secretary Rajesh Bhushan took note of the States failing to conduct the RTPCR tests. "There are many states where people test... negative for rapid-antigen ...

# World listening to India more, says PM

Modi says the media industry of the country needs to go global like other sectors

SPECIAL CORRESPONDENT
JAIPUR

Prime Minister Narendra Modi on Tuesday said India's media industry needed to go global at a time when the country had a significant presence at almost all international forums and its voice and products were becoming more global. The world was listening to India now with more attention, Mr. Modi said.

Inaugurating the 'Patrika ...

A moment to reflect: Patrika Gate is the latest addition to Jaipur's many tourism attractions. • PTI

... Circle garden situated nearby.

While calling upon Indian institutions to give away literary awards on the pattern of global bodies, Mr. Modi said that writers as an enlightened section acted as the ...

... process that lasts the entire life after formal education is over ...

# PM-Kisan norms eased for Covid, TN probes Rs 110 cr fraud, 18 held

ARUN JANARDHANAN
CHENNAI, SEPTEMBER 8

THE Tamil Nadu government has discovered a scam amounting to over Rs 110 crore in the PM-Kisan Scheme, with money withdrawn fraudulently online with the help of government officials and local-level politicians. Initial estimates show nearly five-and-a-half lakh people may have benefited as advantage was taken of clearance norms being relaxed after the Covid-19 lockdown began.

Principal Secretary Gagandeep Singh Bedi said they first noticed the unusually high number of beneficiaries being added to the scheme in August, especially from 13 districts. While 18 people, all 'agents' or 'brokers', have been arrested, 80-odd officials associ... agricultu...

# India tests scramjet tech for hypersonic missiles, is 4th in club

Rajat.Pandit@timesgroup.com

New Delhi: India on Monday successfully tested an indigenously developed hypersonic technology demonstrator vehicle powered by a scramjet engine, which will serve as a critical building block for the next-generation hypersonic cruise missiles capable of fly... speeds above Mach 5.

**1ST TEST IN '19 FAILED**

- India successfully tested a scramjet engine-powered hypersonic technology demonstrator vehicle (HSTDV) off Odisha coast at 11.03 am
- Maiden test of HSTDV had failed in June 2019
- HSTDV will pave the way for development of hypersonic (Mach 5) cruise missiles. Tech will also help launch of ...

# Tech holds key to scale up use of solar energy: PM

ENS ECONOMIC BUREAU
NEW DELHI, SEPTEMBER 8

PRIME MINISTER Narendra Modi on Tuesday stressed on the need to reduce the cost of solar power in order to boost the use and expansion of renewable energy, adding new technologies will help in this regard.

In a statement delivered by Power Minister RK Singh during the first World Solar Technology ...

# PM launches Matsya Sampada Yojana, says scheme will double fish exports in 3-4 years

EXPRESS NEWS SERVICE
NEW DELHI, PATNA, SEPTEMBER 10

PRIME MINISTER Narendra Modi on Thursday launched the PM Matsya Sampada Yojana, which aims to double fish exports in three-four years.

Launching the scheme via video-conference, the PM said, "Today the scheme is being launched in 21 states across the country. Over Rs 20,000 crore will be spent on this in the next 4-5 years. Works worth Rs 1,700 crore are being started today. Under the scheme, several facilities have ...

PM Narendra Modi at the launch of the scheme. PTI

After opening his speech in Bhojpuri, Modi switched to Hindi to say: "The thinking behind launching sundry schemes ...

Giriraj Singh joined the launch programme from Patna via video-conference.

Under the new scheme, fish producers will get new infrastructure, modern equipment, and new markets will be provided, Modi said. "This will increase earning opportunities through farming as well as other means." The scheme will boost fish, milk and honey production, paving the way for blue, white and sweet revolutions, he said.

The PM also launched other initiatives for fisheries, dairy and animal husbandry including e-GOPALA app, which will provide information "related to cattle care, from productivity to its health and diet". The app will en...

"A cow generally gives birth to one calf in a year, but there have been experiments in laboratories getting several calves in a year through IVF technique. We intend to extend this technique to every village."

Referring to Mission Dolphin, which was announced on August 15, Modi said, "I learnt that Nitish Babu has been quite excited with the project. I believe if the number of dolphins goes up, it would benefit people living by Ganga." He was referring to the positive impact of rearing dolphins on fishery.

Lauding the work done by the Bihar government, Modi praised Nitish for the scheme to deliver drinking water to every home ...

# MODI LAUNCHES PROJECTS TO BOOST FISHERIES SECTOR, HAILS BIHAR CM NITISH

Vijay Swaroop
letters@hindustantimes.com

PATNA: Prime Minister Narendra Modi Thursday launched Pradhan Mantri Matsya Sampada Yojana, a flagship scheme for focused and sustainable development of the fisheries sector in the country, and other projects ...

# Modi, Abe may discuss future of bullet train project

India-Japan Summit likely later this week; date yet to be announced

AMITI SEN
New Delhi, September 8

A discussion on the future of India's ambitious bullet train project being funded by Japan may be on the agenda of the virtual meeting between Prime Minister Narendra Modi and his Japanese counterpart Shinzo Abe at the bilateral summit likely later this week.

... know told BusinessLine.

"While a discussion on the bullet train project will most likely take place, the high-priority military logistics pact, the Acquisition and Cross Servicing Agreement (ACSA), could be either signed on the day of the meet or a day before. A digital partnership is another area of focus."

Abe's determination to go ... the summit despite ...

A file picture of Prime Minister Narendra Modi with his Japanese counterpart Shinzo Abe on-board the Shinkansen bullet train to Kobe PTI

... has become more signific... dia using Japan's Shinkansen technology is of high priority ...

... bai and Ahmedabad was being reviewed as the post-Covid world would require 'a lot of tightening of the belt'.

"Japan wants to discuss how to proceed with the high speed railway project in India because of both the budgetary shortfall and problems with land acquisition," the official said.

Japan offered a loan amounting to 81 per cent of the cost of the $15-billion project in 2015. Scheduled for completion in December 2023, the high-speed link is expected to reduce the current eight-hour journey between Ahmedabad and Mumbai (a distance of about ... km) to under three hours.

... chains in a post-Covid world, the official said.

"Japan's recent move of including India and Bangladesh in the subsidy programme for Japanese investors seeking to shift their investments from China indicates its seriousness towards a greater partnership with India. This mutual interest is likely to be reflected in the Abe-Modi interaction," the official added.

Tokyo has indicated a number of areas where India can improve, such as infrastructure, time taken in clearances, quality issues, and policy continuity, in order to attract more Japanese investments.

Japan is the fourth largest investor in India, after Mauritius, ... the Nether...

RNI No. :
DELTAM/2020/78809
October: 1-15, 2020

நியூ இந்தியா
சமாச்சார்
மாதம் இருமுறை

RNI Registered No. DELTAM/2020/78809, Delhi Postal License No DL (S)-1/3551/2020-22, WPP NO U (S)-99, posting at BPC, MEGHDOOT BHAWAN, NEW DELHI-110001 On 26-30 advance Fortnightly, (Publishing Date September 23, 2020, Pages 44)



**சுயசார்பு, வெளி நாட்டுப் பொருட்களைப் புறக்கணித்தல் ஆகிய எண்ணங்கள் சுதேசி இயக்கத்துடன் தோன்றி விடுதலைப் போராட்டத்தில் மிக முக்கிய ஆயுதங்களாக உருவெடுத்தன. ராட்டை மிகப் பரவலான அளவில் பிரபலமாகியது. காதி தேசிய இயக்கத்தின் ஆடையாக மாறியது. காந்திஜி காதியை விடுதலைக்கான, தன்னிறைவுக்கான சின்னமாகக் கருதினார். இந்த சுதேசி இயக்கத்தின் எண்ணத்தை முன்னெடுத்துச் செல்வதாக அமைந்துள்ளது, பிரதமர் நரேந்திர மோடி சுயசார்பு இந்தியாவை உருவாக்குவோம் என்று விடுத்துள்ள அறைகூவலும், இந்திய அரசின் "இந்தியாவில் உருவாக்குவோம்" என்ற திட்டமும்.**

" என்னைப் பொறுத்தவரை காதி, இந்திய மனிதத்தின் ஒற்றுமை, பொருளாதார விடுதலை, சமத்துவம் ஆகியவற்றுக்கான சின்னமாகும் "

மகாத்மா காந்தி

**Published & Printed by:** **Satyendra Prakash**, DG, BOC on behalf of Bureau of Outreach and Communication

**Editor: Kuldeep Singh Dhatwalia**, PDG, PIB, New Delhi

Published from Bureau of Outreach and Communication, 2nd Floor, Soochna Bhawan, New Delhi -110003

**Printed at** Infinity Advertising services Pvt Ltd. FBD-One Corporate Park, 10th floor, New Delhi-Faridabad border, NH-1, Faridabad-121003